வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 02.09.2023 சனிக்கிழமை இதழ் : 266 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# 13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பிலேயே இல்லை!

## இந்தியாவுக்கும் இது தெரியும் பகிரங்க விவாதத்துக்கும் தயார்



### கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 02

“பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பிலேயே இல்லை - இது இந்தியாவுக்கும் தெரியும் - இந்த விடயம் தொடர்பாக பகிரங்க விவாதத்துக்கும் நான் தயாராகவுள்ளேன்.” - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

11

ஈஸ்டர் தாக்குதல்:

## பாதிக்கப்பட்டோருக்கான நீதி அரசால் தாமதமாக்கப்படுகிறது

### கர்தினால் மல்கம் ரஞ்சித் சாடல்!



கொழும்பு, செப். 02

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதை தாமதமாக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் மீண்டும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பயங்கரவாத குழுவினர் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்வதற்கான அனைத்து ஆதரவையும் வழங்கிய குழு ஒன்றுள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெறாத சில விடயங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளதா கவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் அபுஹிந் என்ற நபரோ குழுவோ இருப்பதாக புதிய தகவல் கள் கிடைத்துள்ளன. இந்த ஆதாரம் வெளியான வேளை ஐந்து நீதிபதிகளில் ஒருவர்

11

## உணவு பாதுகாப்பின்மையால் 60 இலட்சம் மக்கள் பாதிப்பு!

### ஐ. நா. அபிவிருத்தித் திட்டம்

கொழும்பு, செப். 02

60 இலட்சம் இலங்கையர்கள் உணவு பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா.. அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் அறிக்கைகளை மேற்கோள்காட்டி அவர் இந்த தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஊட்டச்சத்து, கல்வி, வீட்டுக் கடன் அல்லது பேரிடர் அபாயம் தொடர்பான பிரச்னைகளை உள்ளடக்கிய 25 ஆயிரம் குடும்பங்களில் இருந்து தரவுகளை பெற்று தேசிய அளவிலான

11

## யாழ். வம்சாவளியினரான சண்முகரத்தினம் சிங்கப்பூரின் ஜனாதிபதியாக தெரிவானார்!



சிங்கப்பூர், செப். 02

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தர்மன் சண்முகரத்தினம் (வயது 66) வெற்றிபெற்றுள்ளார். இலங்கை வம்சாவளி தமிழரான இவரின், பாட்டானார் யாழ்ப்பாணம் - ஊரெழுவை சேர்ந்தவராவார்.

2011ஆம் ஆண்டுக்கு பின்னர் சிங்கப்பூரில் நடந்த முதல் ஜனாதிபதி தேர்தல் இதுவாகும். சீன வம்சாவளியை சேர்ந்த இரண்டு போட்டியாளர்ளை தர்மன் சண்முகரத்தினம் தோற்கடித்தார்.

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 27 இலட்சம்

11

## எரிபொருளுக்கான கோட்டா முறை நீக்கப்பட்டது!

கொழும்பு, செப். 02

எரிபொருளை கோட்டா முறைமையில் விநியோகிக்க இலகுவாக அறிமுகம் செய்யப்பட்ட கியூ. ஆர். முறைமை நிறுத்தப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ. ஆர். கோட்டா முறைமை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டது.

## வட, கிழக்கில் அரச அனுசரணையில் காணி அபகரிப்புகள் தொடர்கின்றது

### மனித உரிமை பேரவை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார் விக்னேஸ்வரன் எம். பி.!

யாழ்ப்பாணம், செப். 02

வடக்கு - கிழக்கில் குருந்தூர், தையிட்டி, செட்டிக்குளம், நாவற்குழி போன்ற இடங்களில் அரச அனுசரணையுடன் காணி அபகரிப்புகள் இடம் பெறுகின்றன என்ற உண்மை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கையின் ஊடாக வெளிக்கொணரப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள்

11



## யாழ். மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்!

### கடற்றொழிலாளர்கள் நடத்தினர்

யாழ்ப்பாணம், செப். 02

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை கண்டித்தும் இரு நாட்டு மீனவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தியும் கடற்றொழிலாளர்கள் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் முன்னெடுத்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பாசையூர் கடற்றொழிலாளர் சங்கம், பருத்தித்துறை கடற்றொழிலாளர்

11

## எரிவாயுவின் விலையும் அதிகரிக்கலாம்!

கொழும்பு, செப். 02

லிட்ரோ எரிவாயுவின் விலை எதிர்வரும் திங்கட்கிழமை அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்று அந்த நிறுவனத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிவாயு விலை சூத்திரத்தின்படி, ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதி எரிவாயு விலையில் திருத்தம் செய்யப்படலாம். கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. (ஐ)

## பஸ் கட்டணம் 4 வீதம் உயர்வு

கொழும்பு,செப். 02

எரிபொருள் அதிகரிப்பையடுத்து பேருந்து கட்டணம் 4 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நள்ளிரவு

11

## இந்திய பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை வருகை ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 02

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு இன்று வருகை தரவிருந்தார். ஆனால், அவரின் இந்தப் பயணம் கடைசி நிமிடத்தில் ஒத்திவைக்கப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இரு நாள் பயணமாக இன்றைய தினம் இலங்கை வருகை தரவிருந்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க,

11

# இப்படியும் நடக்கிறது

“எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் என்பது தீர்மானமிக்க மாதமாகும். வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பட்டுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கியுள்ள உறுதிமொழிக்கு அமைவாக, அவற்றை மதிப்பீடு செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள்.

அதற்கு முன்பாக உள்நாட்டு கடன் வழங்குநர்கள், அதேபோன்று வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டியது அவசியமாகும்.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இணக்கப்பாட்டுக்கு வர முடியவில்லையாயின், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து அரசாங்கம் எதிர்பார்க்கும் விடயங்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

மறுபுறத்தில் அவ்வாறு உடன்பாட்டுக்கு வரவேண்டுமாயின், பெற்றுக்கொண்ட கடனில் ஒரு தொகையை கடன் வழங்கிய தரப்பினருக்கு செலுத்த நேரிடும். அவ்வாறாயின் எமது டொலர் இருப்புக்கு மீண்டும் பிரச்னை ஏற்படும்.

நாடு தற்போது சீராக பயணிப்பதாக நினைத்தாலும் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே பயணித்துக் கொண்டுள்ளது. வியாபாரத் துறைகள் செயலிழக்கும்; தொழில்வாய்ப்புகள் இல்லாமல் போகும். நாட்டில் பணவீக்கம் குறைவடைந்துள்ளதாகக் கூறினாலும் பொருட்களின் விலைகள் குறையவில்லை.

ஒவ்வொரு துறைகளிலும் கற்றோர் சமூகம் என்பது வெளியேறி வருகின்றது. இன்னும் ஒரு வருடம் செல்லும்போது பல்கலைக் கழக பேராசிரியர்கள் இந்த நாட்டில் இல்லாமல் போவார்கள்.”

மேலேயுள்ள விடயங்களை சொல்லியிருப்பவர் இந்த ஊர்க்குருவி அல்ல. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று பரவலாக நம்பப்படும் பாட்டாலி சம்பிக்க ரணவக்கதான்.

அவர் சொல்கின்ற விடயங்களில் இந்த ஊர்க்குருவியை உறுத்திய விசயம், இன்னும் ஒரு வருடம் செல்லும்போது பல்கலைக்கழகங்களில் பணியாற்ற பேராசிரியர்கள் இருக்கமாட்டார்கள் என்கிறார் அவர்.

அதாவது, தெற்கிலும் புலமையாளர்கள், புத்திஜீவிகள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார் அவர். அவர்கள் வெளியேறுவது நாட்டுக்கு மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மையானதுதான் என்றாலும், நாட்டின் மக்கள் தொகையில் எண்பது வீதமான சிங்கள மக்கள் மத்தியில் குடிப்பரம்பலில் அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

அண்மையில், ஓர் இராஜ தந்திரியை கொழும்பில் சந்தித்தபோது அவர் கேட்டார், தமிழ் மக்கள் அதிகளவில் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்களாமே அது உண்மையா? என்று, அவர் அப்படி கேட்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர்தான் இளம் சட்டத்தரணி நண்பர் ஒருவர் சந்தித்திருந்தார். அவரது கவலை எல்லாம் தனக்கு இரத்த உறவினர் யாரும் கனடாவில் இல்லை என்பதாகவே இருந்தது.

“ஏன் சட்டத்துறையில் நல்லாத்தானே இருக்கிறீர்கள்? பிறகு எதற்கு கனடா போக ஆசைப்படுகிறீர்கள்?” என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், “இங்கு எவ்வளவுதான் இருந்தாலும் ஏதோ ஒன்று இல்லாததுபோலத் தான் இருக்கின்றது. அங்கே போனால் நல்லது போல மனது சொல்கிறது” என்றார்.

இதனை அந்த இராஜ தந்திரியிடம் சொன்னேன். குடிவரவு திணைக்கள அதிகாரி ஒருவர் சொன்ன தகவலை அந்த இராஜதந்திரி எனக்கு மீட்டார்.

தினசரி நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனராம்.

அந்த இராஜதந்திரி கேட்டார், “உங்கள் அரசியல்வாதிகள் எல்லோரும் சமஷ்டிக்காக அடிபட்டுக் கொண்டிருக்க, மக்கள் இப்படியே வெளியேறினால், யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஒரு சிங்கள எம். பி. உடனடியாக வராவிட்டாலும் வவுனியாவில் ஒரு காதர் மஸ்தான் போல அங்கும் ஒருவர் வந்துவிடுவார். முல்லைத்தீவில் ஒரு சிங்களவர் வந்துவிடுவார்” என்றார்.

மக்களை இந்த நாட்டில் தொடர்ந்து வாழ்வதற்காக ஊக்குவிக்காமல் அவர்கள் வெளியேறுவதையே நமது தலைவர்கள் ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது அந்த இராஜதந்திரிக்கு புரிந்து என்ன பலன். புரியவேண்டியவர்களுக்கு புரிந்தால்தானே.!

**- ஊர்க்குருவி.**

# வடக்கு மாகாணத்தின் உற்பத்திகளுக்கு தென்னிலங்கையில் சந்தை வாய்ப்புகள்

## கைத்தொழில் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப். 02

வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்கு தென்னிலங்கையில் சந்தை வாய்ப்பினை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னுடைய முயற்சிகளுக்கு துறைசார் அமைச்சரான மருத்துவர் ரமேஸ் பத்திரன பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்குவார் எனவும் தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கைத்தொழில் கண்காட்சி நேற்று காலை ஆரம்பமானது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரன மற்றும் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, யாழ் இந்திய துணைத் தூதுவராலயத்தின் பிரதானி ராகேஸ் நடராஜன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் இன்று ஆரம்பமான இக்கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள 20 தொழிற்சாலைகளில் உள்ள 300க்கும் மேற்பட்ட காட்சி கூடங்களில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்திற்கே உரித்தான பல கைத்தொழில்களை Industry 2023 யாழ்ப்பாண பதிப்பு தொழில் கண்காட்சியில் காணக்கூடிய தாகவுள்ளது.

(அ)

# ராஜகுமாரி உயிரிழப்பு; பொலிஸார் மூவர் கைது!

கொழும்பு, செப். 02

வெலிக்கடையில் பொலிஸ் காவலில் வைத்து பணிப்பெண் ராஜன் ராஜகுமாரி (வயது 42) உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள் களும் உள்ளடங்குவர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் சில நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்

சிங்கள நாடக தயாரிப்பாளரின் வீட்டு பணிப்பெண் ராஜன் ராஜேஸ்வரி வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் காவலில் இருந்தபோது உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

பணிப்பெண், தனது வீட்டில் திருடினார் என்று குறித்த தொலைக்காட்சி தயாரிப்பாளர் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 2023 மே 11 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

# சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையம் 20 நாட்கள் மூடல்!

கொழும்பு, செப். 02

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகளுக்காக செப்ரெம்பர் 18 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 8 ஆம் திகதி வரை மூடப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக நேற்றுத் தெரிவித்தார்.

தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க போதுமான அளவு எரிபொருளை இறக்குமதி செய்ய ஏற்கனவே, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ)



# கண் சத்திர சிகிச்சையில் 17 பேருக்கு பார்வை பாதிப்பு

## இருவர் முற்றாக பார்வை இழந்தனர்

நுவரெலியா, செப். 02

நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் நடத்தப்பட்ட 37 கண் சத்திர சிகிச்சைகளில் 17 பேர் பகுதியளவில் பார்வையிழந்தனர். அத்துடன், இருவர் பூரண பார்வை இழந்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கனிஷ்க மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

சமூக வலைத்தளங்களில் பல தகவல்கள் வந்தாலும் உண்மை நிலவரத்தை இங்கு வெளிப்படுத்த வேண்டும். கண்களுக்கு செலுத்தப்பட்ட மருந்துகள் மருத்துவர்களால் தவறாகியதாக நினைக்கின்றனர். இதற்கான பொறுப்பை ஏற்க முடியாது.

அரசின் நலனுக்காக தரம் தாழ்ந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அவசர கொள்வனவு விலையில் பல வகையான மருந்துகள் கொண்டு வரப்படுவதாகவும் பெரும்பாலானவை தரமற்றவை என்றும் குறிப்பிட்டார்.

இவற்றில் ப்ரெட்னி சோலோன் கண் மருந்தும் ஒன்று. இனிமேல் இதுபோன்ற தரம் குறைந்த மருந்துகளை கொண்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மருத்துவர் என்று சொன்னாலும் சில இடங்களில் மனநோயாளிகள் போல நடத்தப்படுகிறோம். இந்த நிலைமைக்கு இழுத்திருப்பது அரசாங்கமே. மருத்துவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படாததால் அவர்கள் அதிகளவில் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

சத்திரசிகிச்சைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்த இழப்பீடு நிவாரணமும் வழங்கவில்லை. இழப்பீடு வழங்கினாலும் அவை எவ்வளவு நாட்களுக்கு போதுமானது என்றும் கேள்வியெழுப்பிய அவர், அப்பாவி மக்களுக்கு இழப்பீடுக்கு அப்பால்பட்ட ஒன்றை வழங்குவது கட்டாயமாகும் - என்றும் கூறினார்.

(ஐ)

### செய்தியில் திருத்தம்!

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்கள் அனைத்தும் அதிகரித்திருந்தன. இதன்படி, ஒட்டோ டீசலின் விலை லீற்றருக்கு 35 ரூபாயால் அதிகரித்திருந்தது.

இந்த செய்தி எமது நேற்றைய நாளிதழில் ஒட்டோ டீசல் லீற்றருக்கு 35 ரூபாயால் குறைக்கப்பட்டதாக தவறாக வெளியாகியிருந்தது.

செய்திப் பிழையால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்.

**- ஆசிரியர்.**

Eelanadu ஈழநாடு
02.09.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எது அமெரிக்க தூதுவரின் எல்லை?

அமெரிக்கத் தூதுவர் அவரின் எல்லையை மீறுகிறார் என்று கூறி மருத்துவர் குணதாச அமரசேகர தலைமையிலான குழுவினர் வெளிவிவகார அமைச்சில் கடிதமொன்றைக் கையளித்திருக்கின்றனர். குறித்த குழுவினர், தங்களை 'தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பு' என அழைக்கின்றனர். அமெரிக்கத் தூதுவர் அவரின் எல்லையை மீறி இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்கிறாரெனவும் – அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றுமே – குறித்த குழுவினர் வலியுறுத்தியிருக்கின்றனர். முதலில், எது உள்நாட்டு விவகாரம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் விடயங்கள் உள்நாட்டு விவகாரங்கள் அல்ல. இந்த அடிப்படையில் நோக்கினால் அமெரிக்கத் தூதுவரின் தலையீடு முற்றிலும் சரியானது – ஆனால், அது போதுமானதல்ல என்றே தமிழர்கள் கருதுகின்றனர்.

சமகால அரசியல் எதிர்பார்ப்புகளை எடுத்து நோக்கினால் அமெரிக்காவின் அழுத்தங்கள் போதாதென்னும் பார்வையே வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வெளிவருகின்றது. அமெரிக்க தூதுவரை சந்திக்கும் தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகளோ இலங்கைமீதான அமெரிக்க அழுத்தங்களின் போதாமையை தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருகின்றனர். அமெரிக்க தூதுவர் அதிகளவில் இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டுமென்றே கோரிவருகின்றனர். இந்த அடிப்படையில் நோக்கினால் இரண்டு நாடுகள் இருப்பதான தோற்றத்தையே ஒருவர் உற்றுநோக்கலாம். அந்தளவுக்கு சர்வதேச தலையீடுகளை தமிழர் எதிர்பார்க்கின்றனர் – மறுபுறமோ, அமெரிக்கத் தூதுவர் அவரின் எல்லையை மீறுகிறாரென சிங்கள அடிப்படைவாத அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

சிங்கள அடிப்படைவாத தரப்புகள் ஒருபோதும் அறிவின் வழியாக விடயங்களை உற்று நோக்குவதில்லை. மாறாக, சிங்கள மக்கள் மத்தியில் அறியாமையையும் – அச்சத்தையும் விதைப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். இந்த அடிப்படையில்தான், அவ்வப்போது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் எதிரான கருத்துகளை பிரசாரப்படுத்தி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இந்திய மற்றும் அமெரிக்காவின் உதவிகளுக்காக கையேந்தி நிற்கும் – அதற்காக எவ்வாறான சமரசத்தையும் செய்வதற்கு தயாராக இருக்கின்ற சிங்கள ஆளும் வர்க்கமோ, மறுபுறம் தேசிய இனப்பிரச்னை, மனித உரிமைகளை பாதுகாக்கும் விடயங்கள் – என்று வருகின்ற போது அமெரிக்க தூதுவர் அவரின் எல்லையை மீறுகிறார் என்று குற்றஞ்சாட்டத் தயங்குவதில்லை.

உண்மையில், இலங்கையின் தேசிய இனப்பிரச்னையை உள்நாட்டுக்குள் தீர்க்க முடியாத இடத்தில்தான் வெளியாரின் தலையீடுகளை பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். அமெரிக்க – இந்திய தலையீடுகளை அதிகளவில் எதிர்பார்க்கின்றனர். இலங்கை மீதான அழுத்தங்களை அமெரிக்கா அதிகரிக்க வேண்டுமென்னும் கோரிக்கையை பாதிக்கப்பட்ட மக்கள் முன்வைக்கின்றனர். தமிழ் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகமும் இந்தியாவின் தலையீட்டைக் கோரி கடிதங்களை அனுப்புகின்றன. இவற்றின் ஆழத்தைப் புரிந்துகொள்ள சிங்கள ஆளும் வர்க்கம் தயாராக இல்லை.

இந்தப் பின்னணியில் நோக்கினால் அமெரிக்க தூதுவர் அவரின் எல்லையை தொடர்ந்தும் இராஜதந்திர வரையறையென்னும் பெயரில் சுருக்கிக் கொள்ளக்கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இலங்கையின் ஆட்சியாளர்கள் கடுமையான அழுத்தங்கள் இல்லாவிட்டால் எந்தவொரு முன்னேற்றத்தையும் நிரூபிக்க மாட்டார்கள்.

# இந்திய போர் கப்பல் கொழும்பு வந்தது!

*கொழும்பு, செப். 02*

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ. என். எஸ். டில்லி எனும் யுத்த கப்பல் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.



இந்த கப்பல் 163 மீற்றர் நீளமுடையது. கப்பலில் வருகை தந்த கடற்படையினர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுலா செல்லவுள்ளனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐ. என். எஸ். டில்லி கப்பலை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும். இதன்போது, மேற்கு கடற்பரப்பில் இலங்கை கடற்படை கப்பலுடன் பயிற்சி நடவடிக்கைகளிலும் குறித்த கப்பல் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெரும்போக செய்கைக்கு நிலத்தை தயார்படுத்துங்கள்!

## விவசாய அமைச்சு கோரிக்கை

*கொழும்பு, செப். 02*

பெரும்போக நெற்செய்கைக்காக நிலத்தை தயார்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்துக்காக கால்வாய்களை தூய்மைப்படுத்தல், வாய்க்கால்களை தூர் வாருதல், களைகளை பிடுங்குதல் மற்றும் நிலத்தை தயார்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறு அறிக்கை ஒன்றின் ஊடாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாயிகளை தெளிவுபடுத்துமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவால் விவசாய திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பின் பிரகாரம், இம்முறை பெரும்போகத்தில் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வறட்சியான காலநிலை நிலவக்கூடும் எனவும், இயன்றளவு நீரை முகாமைத்துவப் படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வறட்சியால் இம்முறை சிறுபோகத்தில் 59,073 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இரத்ததான முகாம்

*யாழ்ப்பாணம், செப். 02*

சுயாதீன ஊடகவியலாளர் அமரர் ஞா. பிரகாஸின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் நண்பர்களால் நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த குருதிக்கொடை நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொண்டு உதிரம் கொடுத்து உயிர் காக்கும் உன்னத பணியில் இணையுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ஐ-ரி)

# இசை நிகழ்வும் பயிற்சி பட்டறையும்

*யாழ்ப்பாணம், செப். 02*


வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகும் யாழ். இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் 'தெய்வீக சுகானுபவம்' நிகழ்வை நடத்தி வருகின்றன.

இதன் 9ஆவது நிகழ்வில் இந்தியாவின் புல்லாங்குழல் வாத்திய விற்பன்னர் ஜே. ஏ. ஜெயந்த், வயலின் வாத்திய விற்பன்னர் பி. அனந்தகிருஷ்ணன் ஆகியோர் இசை நிகழ்ச்சியையும் பயிற்சி பட்டறையையும் நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பயிற்சி பட்டறையில் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் பங்கேற்க முடியும்.

9ஆம் திகதி மாலை 6.30 மணி முதல் நல்லூர் சங்கிலியன் தோப்பில் (கிட்டு பூங்கா) இசை நிகழ்வு நடைபெறும். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்டம்பர் - 02 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 16
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரிதியை




**மேடம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வாகனத்தில் கவனம் தேவை.பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். முக்கியத்துவம் கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகப் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும். அந்தஸ்து உயரும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். மேலதிகாரி குறை கூறுவார்.

**கன்னி**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**விருட்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு**
எதிர்பார்த்த காரியங்களில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மகரம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கும்பம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். கேட்ட இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புதிய வாய்ப்புகள் வரும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். கூடுதல் கவனம் நல்லது.

# கச்சதீவு மீட்பு விவகாரத்தில் நீதிமன்றம் தலையிடமுடியாது

## மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

மதுரை, செப். 02

"கச்சதீவு மீட்பு விவகாரம் என்பது மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்று மதுரை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சென்னை மீனவர்கள் நல சங்கத்தைச் சேர்ந்த பீற்றர்ராயன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: "இராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாக கச்சதீவு இருந்தது. 1974இல் இந்தியா மற்றும் இலங்கை இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அடிப்படையில் கச்சதீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகின்றனர்.

கடந்த 2013இல் 111 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கைகள் கச்சதீவு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கவும், 1974ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சதீவை மீட்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு வழக்கறிஞர் வாதிடுகையில்,

"இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்" என்றார்.

பின்னர் தலைமை நீதிபதி அமர்வில், "கச்சதீவு மீட்பு விவகாரம் மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது. மனு முடித்து வைக்கப்படுகிறது" என உத்தரவிட்டது.

(ஐ)

# கருணாநிதி நினைவுச் சின்னம் திறப்புவிழா மீளவும் ஒத்திவைப்பு

சென்னை, செப். 02

பணிகள் முடியாததால் சென்னையில் முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவிடம் திறக்கும் திகதியை தமிழ்நாடு அரசாங்கம் மீண்டும் ஒத்தி வைத்துள்ளது.

கருணாநிதிக்கு 38 கோடி (இந்திய) ரூபாயில் நினைவிடம் கட்டும் பணி சென்னை மெரினாவில் நடந்து வருகிறது. கருணாநிதியின் பேச்சாற்றல், எழுத்தாற்றல், அரசியல் ஆளுமையை விளக்கும் வகையில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கருணாநிதி உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இரவில் சூரியன் ஒளிர்வது போன்று லேசர் ஒளி வசதியும் செய்யப்படுகிறது. நினைவிடத்தை கருணாநிதி நினைவு நாளான கடந்த ஓகஸ்ட் 7ஆம் திகதி திறக்க திட்டமிடப்பட்டது. மெரினாவில் பேனா சிலை அமைக்கும் திட்டத்தால் திறப்பு தள்ளி வைக்கப்பட்டது.

இதை தொடர்ந்து செப். 15ஆம் திகதி நினைவிடத்தை திறக்க திகதி குறிக்கப்பட்டது. ஆனால், கருணாநிதி நினைவிட கட்டுமான பணி மட்டுமின்றி அதற்கு முன்பகுதியில் உள்ள அண்ணாதுரை நினைவிடம் சீரமைப்பு பணியும் முடியவில்லை.

இதைத் தொடர்ந்து கருணாநிதி நினைவிடம் திறப்பு தேதியை மீண்டும் தள்ளி வைக்க அரசு முடிவு எடுத்துள்ளது. நினைவிடத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட பேனா சிலை வைக்கும் திட்டமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

(ஐ)

# பா. ஜ. க. நிச்சயம் தோற்கடிக்கப்படும்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி



மும்பை, செப். 02

நாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன் பா. ஜ. க. நிச்சயம் தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை என்று தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் கூறினார்.

இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தில் தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் உரையாற்றுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

தி. மு. க. தலைவரும் தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின், மும்பையில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தில் உரையாற்றிய போது, இந்தியாவைக் காக்கப் போகும் இந்த இந்தியா கூட்டணி கடந்த மூன்று மாதங்களாக மிகுந்த ஒற்றுமையுடனும் கட்டுக்கோப்புடனும் செயல்பட்டு வருகிறது.

நமது கூட்டணியின் பலத்தைவிட, 'இந்தியா' என்ற பெயரே பாரதிய ஜனதா கட்சிக்குப் பயத்தையும் காய்ச்சலையும் உண்டாக்கி விட்டது. அதனால்தான், நம் கூட்டணியைக் கொச்சைப் படுத்திப் பேசுவதையே பா.ஜ.க.வினர் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் ஒன்று சேர மாட்டார்கள், ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என பா. ஜ. க. நினைத்தது. ஆனால், கூட்டணியாக இணைந்து - அதற்கு பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்திவிட்டோம் என்பது நம்முடைய உறுதியைக் காட்டுகிறது. வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது.

பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தி மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகளின் அரசை மத்தியில் அமைப்பதே நமது அணியின் முழுமுதல் நோக்கமாகும். பா.ஜ.கவைத் தனிமைப்படுத்தும் வகையில் - பா. ஜ. கவுக்கு எதிரான கட்சிகளை முடிந்தவரை இந்த அணியில் சேர்த்தாக வேண்டும். இதனை மனதில் வைத்து அனைத்துத் தலைவர்களும் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கூட்டணி வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவும் அடுத்த ஆண்டு இந்தியாவுக்கான ஒளிமயமான ஆண்டாக அமையவும் இப்போதே எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

(ஐ)

# 'யானை'க்கு நேர்ந்த கதியே மொட்டு கட்சிக்கும் ஏற்படும்

## அடித்துக் கூறுகிறார் சம்பிக்க

**கொழும்பு, செப். 02**

**2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சிக்கு ஏற்படும் என்று 43ஆம் படையணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் சம்பிரதாய கட்சிகளுக்கு மக்கள் எழுச்சியுடன் முடிவு கட்டப்பட்டுள்ளது. அக்கட்சிகளின் உறுப்பினர்கள் என்னதான் நினைத்தாலும் மக்கள் ஆணை இனி கிடைக்கப் போவதில்லை. ஜூலை 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமல்ல சம்பிரதாய கட்சிகளும் அரசியல் ரீதியில் தோற்கடிக்கப்பட்டன. எதிர்க்கட்சியும் தமது பொறுப்பை நிறைவேற்றவில்லை. இதனால்தான் மக்கள் தாமாகவே வீதிக்கு இறங்கி ஆட்சியாளர்களை விரட்டியடித்தனர்.



அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மொட்டு கட்சி இன்னும் அறிவிப்பு விடுக்கவில்லை. 2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில் மொட்டு கட்சிக்கும் ஏற்படும்-என்றார்.

# கனடா அனுப்புவதாகப் பண மோசடியில் ஈடுபட்ட யாழ்.வாசி வவுனியாவில் கைது!

**வவுனியா, செப். 02**

கனடா அனுப்புவதாக கூறி வவுனியாவில் 6 பேரிடம் பணம் பெற்று மோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை வவுனியா பொலிசார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

வவுனியா பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மூல்லைத்தீவு மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவதாக கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் பெற்றுள்ளார்.

ஒருவரிடம் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 6 பேரிடம் பணம் பெற்றுள்ளதுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார்.

எனினும் கனடா அனுப்பாது மோசடி செய்ததாக பாதிக்கப்பட்ட நபர்கள் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், 41 வயது நபர் ஒருவரை கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# மக்கள் பொறுமை இழக்க முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள்

## முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை

**கொழும்பு, செப். 02**

மக்கள் பொறுமை இழக்கும் முன்னர் ஜனாதிபதி தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லப் பிரேரணைக் கொண்டுவரப்படவுள்ளது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சரைக் காப்பாற்றும் வகையில் செயற்படுமாறு ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதியும் இந்த குற்றவாளி அமைச்சர்களை பாதுகாக்கும் பொருட்டே தற்போது செயற்பட்டு வருகிறார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்து விட்டதாக தற்போது பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது ஹரின் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவும் பல விடயங்களை பாராளுமன்றில் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக உண்மைகளை கண்டறிந்துகொள்ளத் தான் அரசாங்கத்துடன் இணைவதாகவும் அவர்கள் அன்று கூறினார்கள்.

எனவே, இவர்கள் அன்று வெளிப்படுத்திய அந்தக் கருத்துக்கள் உண்மையானவையா இல்லையா என்பதை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரியப்படுத்த வேண்டும்.இவர்களின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டனவா?

அதேபோன்று ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடித்துவிட்டார்களா என்று அமைச்சர்களான ஹரின் பெர்ணான்டோவிடமும் மனுஷ நாணயக்காரவிடமும் நாம் கேட்க விரும்புகிறோம். உங்கள் அரசாங்கம் இது தொடர்பாக விசாரணைகளை முடித்துவிட்டதா?

மக்கள் இவற்றையெல்லாம் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொறுமை இல்லாது போகும் முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

# ஜனாதிபதி ரணிலுக்கு அநுர சவால் இல்லை!

## கூறுகிறார் ஆஷூ மாரசிங்க

**கொழும்பு, செப். 02**

ஜனாதிபதி வேட்பாளராக தேசிய மக்கள் சக்தி அநுரகுமார திஸாநாயக்கவை பெயரிட்டிருக்கின்றமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்த வகையிலும் சவாலாக அமையப் போவதில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த வருடம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுவருகின்றன. டலஸ் அணி இது தொடர்பாக ஜே.வி.பி மற்றும் சுதந்திரக்கட்சி ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளன. எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் கலந்துரையாடுவார்கள். ஆனால் இவர்கள் யாருக்கும் நாட்டை முன்னுக்கு கொண்டுசென்று, அபிவிருத்தி செய்ய எந்த திட்டமும் இல்லை.

அதற்கான வேலைத்திட்டத்தையும் இவர்கள் இதுவரை முன்வைக்கவும் இல்லை. என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியிலேயே அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வதற்கான இலக்கொன்று அவரிடம் இருக்கிறது. அந்த இலக்கை நோக்கிய பயணத்தையே தற்போது அவர் மேற்கொண்டு வருகிறார். நாடு பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்த சந்தர்ப்பத்தில் அன்று ஜே.ஆர் ஜெயவர்த்தன நாட்டை அபிவிருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கையைய தற்போது ரணில் விக்ரமசிங்கவும் மேற்கொண்டு வருகிறார். அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் தயாராகிவருகின்றபோதும் ரணில் விக்கிரமசிங்க 2048ஆம் ஆண்டாகும்போது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வேலைத்திட்டத்தை படிப்படியாக மேற்கொண்டு வருகிறார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை குழப்புவதற்கான நடவடிக்கையாகவே எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை கையில் எடுத்துள்ளன. அதனாலேயே தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவை பெயரிட்டிருக்கிறது.

அது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளப்போவதில்லை. ஏனெனில் வங்குரோத்தடைந்திருந்த நாட்டை, அதிலிருந்து மீட்டு, நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தது ரணில் விக்ரமசிங்க என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்-என்றார். (அ)

# மன்னாரில் 15 ஏக்கர் அரச காணியை சுவீகரிக்க எடுத்த முயற்சி முறியடிப்பு

**மன்னார், செப். 02**

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கோவில்குளம் பகுதியில் சுமார் 15 ஏக்கர் அரச காணியை சட்டவிரோதமான முறையில் சுவீகரிக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் நேற்று முன் தினம் இரவு ஜே.சி.பி இயந்திரங்களைப் பயன்படுத்தி காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதிக்குச் சென்றதையடுத்து, குறித்த நபர்கள் ஜே.சி.பி இயந்திரங்களை கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இனந்தெரியாத நபர்கள் சிலர் ஜே.சி.பி இயந்திரங்களைப் பயன்படுத்தி காடுகளை அழித்து காணியைத் துப்புரவு செய்வதாக இலுப்பைக்கடவை பொலிஸார் மற்றும் இராணுவத்தின் 541ஆவது படைப்பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், இராணுவம் மற்றும் பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்றனர்.

இந்நிலையில் அவர்களைக் கண்ட சந்தேக நபர்கள் ஜே.சி.பி இயந்திரங்களை அங்கேயே விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் காணியைத் துப்புரவு செய்ய பயன்படுத்திய 3 ஜே.சி.பி இயந்திரங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)



# 13ஐ ஒருபோதும் முழுமையாக அமுல்படுத்தமாட்டார் ரணில்!

## மைத்திரிபால ஆருடம்

கொழும்பு, செப். 02

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்த ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்கமாட்டார் என்றே தான் நம்புவதாக சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பபட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாட்டை அனுப்புமாறு ஜனாதிபதி செயலாளர் கோரி இருந்தார். அதற்கு நாம் பதில் கடிதம் அனுப்பினோம். முதலில் இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும், அப்போது அதில் திருத்த வேண்டிய விடயங்கள், உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கட்சியின் கருத்தை தெரிவிக்க முடியும் என சுட்டிக்காட்டியிருந்தோம்.

13 இல் உள்ள சில அதிகாரங்களை பகிர்வதில் பிரச்சினை இல்லை. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. நீங்கள் (ஊடகவியலாளர்) கூறியதுபோல 7 ஜனாதிபதிகள் கையடிக்காத விடயத்தை இந்த ஜனாதிபதியும் செய்யமாட்டார் (13 ஐ முழுமையாக அமுல்படுத்தல்) என்றே நான் நம்புகின்றேன் -என்றார்.

(அ)

# மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் மீது தாக்குதல்!

கொழும்பு, செப். 02

போதைப்பொருள் சோதனையில் ஈடுபட்ட மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர் மீது மாலபே பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர்களில் காயமடைந்த ஒருவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# வவுனியாவில் உடற்பயிற்சி செய்த கடற்படைப் பயிலுநர் உயிரிழப்பு!

வவுனியா, செப். 02

பூனாவ கடற்படை முகாமில் உடற் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பயிலுனர் சிப்பாய் ஒருவர் திடீரென சுகவீனமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பூனாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம், திரப்பனை பகுதியைச் சேர்ந்த நிமந்த டில்ஷான் ஜயரத்ன என்ற சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் கடற்படையில் இணைந்துகொண்ட அவர், நேற்று முன்தினம் மாலை உடல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது சுகவீனமடைந்து பூனாவ கடற்படை தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# துமிந்த நாகமுவவுக்கு நீதிமன்று அழைப்பாணை

கொழும்பு, செப். 02

எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கமைய, துமிந்த நாகமுவவை நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஆராய்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பொன்றில் துமிந்த நாகமுவ வெளியிட்ட கருத்து தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார்.

ஐரோப்பாவில் அமைந்துள்ள தீவொன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முதலீடு செய்துள்ளதாகவும், அதனுடன் மக்கள் விடுதலை முன்னணிக்கும் தொடர்புள்ளதாகவும் துமிந்த நாகமுவ வெளியிட்ட கருத்து தொடர்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் துமிந்த நாகமுவவிடம் வாக்குமூலமொன்றை பதிவு செய்ய வேண்டியுள்ள போதிலும், அவர் இருக்கும் இடத்தைக் கண்டறிய முடியாமை, அவரை தொடர்புகொள்ள முடியாமை ஆகிய காரணங்களால் அவரை நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கமைய, முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவிற்கு, நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதவான் திலின கமகே அழைப்பாணை பிறப்பித்துள்ளார்.

(அ)

# பளையில் முறையற்ற வகையில் அரச காணிகள் பகிர்ந்தளிப்பு!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அம்பலம்

கிளிநொச்சி, செப். 02

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் முறையற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விடயம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முகமாலை தோட்டம், கனகரஞ்சன் தோட்டம், கிராஞ்சிகுளக்கரை காணி ஆகிய மூன்று இடங்களில் 2010 இற்கு பின்னர் 211 ஏக்கர் காணிகள் 53 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக விவரங்கள் கோரிய ஊடகவியலாளருக்கு பதிலளித்துள்ளது.

ஆனால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் யுத்தத்திற்கு முன்பிருந்து குறித்த காணிகளிலும் மற்றும் காணிகள் இன்றியும் ஏராளமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற சூழலில் அவர்களால் நீண்ட காலமாக குறித்த காணிகளை தமக்கும் வழங்குமாறும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைவாக காணியை பயன்படுத்துவோம் என தெரிவித்தும் அந்த மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படவில்லை பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பல தடவைகள் அந்த பிரதேச மக்கள் பல போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

அத்தோடு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் என பல தரப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் குறித்த காணிகள் ஏற்கனவே பல ஏக்கர் காணிகளுக்குச் சொந்தகாரர்களாக உள்ளவர்களுக்கும், செல்வாக்கு மிக்கவர்களுக்கும் இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர்கள் என காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி கணவன், மனைவி, தந்தை, மகன்,மருமகன் என குடும்பம் ஒரே குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பலருக்கு குறித்த காணிகள் வழங்கப்பட்டுள்ளமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்பட்டுள்ளன.

(அ)

# கடல் மார்க்கமான சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்த தமிழ்க் கட்சிகளின் கவனம் தேவை!

## கடற்தொழிலாளர் சங்கத்தினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 02

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கை விஜயத்தின்போது கடல் மார்க்கமாக இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும் என யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்கு கடல் ஊடாக தொடர்ச்சியாக அதிகளவிலான போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வடக்கு கடலூடாக இம்பெறும் போதைப்பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதற்கு இந்தியக் கடற்படையின் உதவி அவசியமாகக் காணப்படுவதுடன் அது குறித்து இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சரிடம் தமிழ் கட்சிகள் கலந்துரையாடி எல்லைப் பாதுகாப்பை மேலும் அதிகரிக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிடம் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அரசியல் தீர்வு என்பன குறித்து தமிழ் கட்சிகள் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்த நிலையில், இந்த முறை சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம் மற்றும் எல்லைத் தாண்டிய இந்தியப் மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்துவதற்கு அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சரிடம் பேச்சு நடத்தவேண்டும் எனவும் அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# என்னைப் பதவியில் இருந்து நீக்க கட்சி உறுப்பினர்கள் சிலர் முயற்சி

## குற்றம்சாட்டுகின்றார் தயாசிறி

கொழும்பு, செப். 02

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தம்மை நீக்குவதற்கு கட்சியின் சில உறுப்புனர்கள் முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் பின்னர், அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

தம்மை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து சிலர் நீக்குவதற்கு முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் தற்போதே அறிந்திருப்பதாக அவர் கூறினார்.

அத்துடன், கட்சியின் தலைவர் மற்றும் நிறைவேற்று குழு, தாம் பொதுச்செயலாளர் பதவிக்கு பொருத்தம் இல்லை என்ற தீர்மானத்தை எடுத்தால், உடனடியாக அந்தப் பதவியில் இருந்து விலகுவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், அந்த கூட்டத்தின் பின்னர் அங்கிருந்து வெளியேறிய, சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்கவிடம் செய்தியாளர்கள் வினவியிருந்தனர்.

அதற்கு பதிலளித்த அவர், தயாசிறி ஜயசேகரவின் குறித்த குற்றச்சாட்டை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாட்டில் 2ஆவது போராட்டத்தை ஏற்படுத்த அமெரிக்கா திட்டம்!

## பொன்சேகாவும் களத்தில் என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, செப். 02

**இலங்கையில் 2ஆவது மக்கள் போராட்டம் நிச்சயம் வெடிக்கும். இந்த போராட்டம் பயங்கரமானதாக இருக்கும். இதன் பின்னணியிலும் அமெரிக்காவே இருக்கும் - என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டா கோ ஹோம், ரணில் கம் பெக் என்பதே முதலாவது போராட்டத்தின் இலக்காக இருந்தது. இதில் கோட்டா கோ ஹோம் என்பது மட்டுமே வெளியில் தெரிந்தது. ரணில் கம் பெக் என்பது திரைமறைவில் இடம்பெற்றுவந்தது.

2ஆவது போராட்டம் ரணில் கோ ஹோம் என வராது. அது வேறு வடிவில் வரும். அதாவது, ரணில் ஆட்சியில் இரும்கும் போது வர்க்க வேறுபாட்டால் ஏற்படும் போராட்டமாக அது அமையும். பட்டினி, வேலையின்மை உள்ளிட்டவற்றால் மக்கள் வீதியில் இறங்கக்கூடும். மக்கள் உணவுகளை கொள்ளையடிக்கலாம், சுப்பர் மார்க்கெட்டுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்படலாம். செல்வந்தர்களின் சொத்துகள் சூறையாடப்படலாம்.

உணவை எப்படி பதுக்குவது, அதன்மூலம் எப்படி போராட்டத்தை ஏற்படுத்துவதென்பது எல்லாம் சிஐஏ புத்தகத்தில் உள்ளது. விக்டோரியா நூலண்டால் (அமெரிக்க இராஜதந்திரி) இயக்கப்படும் போராட்டத்தின் 2ஆவது பாகமாகவே இது இருக்கும்.



முதலாவது போராட்டத்தில் ஜனாதிபதியை கொலை செய்துவிட்டு லிபியாவில்போன்று, சர்வதேச தலையீட்டுடன் இடைக்கால ஆட்சியை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது. அது சரிவரவில்லை. அதனால்தான் தற்போது பிளேன் 'பீ' வருகின்றது.

முதலாவது போராட்டத்தின் போது இருப்பவர்கள் வீதிக்கு வந்தனர். 2ஆவது போராட்டத்தில் விவசாயிகள், வேலை இழந்தவர்கள் என பலரும் வருவார்கள்.

முதலாவது போராட்டத்தின் போதும் பொன்சேகாவின் பங்களிப்பு இருந்தது. அவர் மட்டுமே போராட்ட களத்துக்கு செல்லக்கூடியதாக இருந்தது. அமெரிக்க, தூதுவருக்கும் பொன்சேகாவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அவர் அமெரிக்காவின் கைப்பாவையாக மாறியுள்ளார். 2010 ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவுக்கு வடக்கில் எப்படி 100 வீத வாக்குகள் கிடைக்கப்பெற்றன. லிபியாவில் இடைக்கால அரசு அமைந்தபோது இராணுவத் தளபதிகள் உள்வாங்கப்பட்டனர். இலங்கையில் அவ்வாறு நடந்திருந்தால் பொன்சேகாவும் இடைக்கால அரசியல் இருந்திருப்பார். 2ஆவது போராட்டத்துக்கும் பொன்சேகா பயன்படுத்தப்படலாம்.

எதிர்வரும் நவம்பர் மாதமளவில் உணவு நெருக்கடி ஏற்படும். நீர் இல்லை. வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் மக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் விழிப்பாக இருக்க வேண்டும்-என்றார். (அ)

# 440 கிலோவுக்கு மேற்பட்ட பீடி இலைகள் பறிமுதல்!



கொழும்பு, செப். 02

கடற்படையினரால் நீர்கொழும்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 440 கிலோவுக்கும் மேற்பட்ட பீடி இலைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

நீர்கொழும்பு, பிட்டிபன்ன தடாகம் பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட படகை சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, பிட்டிபன்ன தடாகம் பகுதியினூடாக சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 440 கிலோ 900 கிராம் பீடி இலைகளை அவர்கள் கைப்பற்றினர்.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# ஓட்டோ கட்டணங்கள் உயராது!

கொழும்பு, செப். 02

நாட்டில் எரிபொருட்களுக்கான விலை அதிகரிக்கப்பட்டாலும் ஓட்டோ கட்டணங்கள் உயர்த்தப்பட மாட்டாது என அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகளினால் சிக்கியுள்ள மக்களுக்கு கட்டண உயர்வை அமுல்படுத்தி மேலும் நெருக்கடி கொடுக்க விரும்பவில்லை என இலங்கை ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஒக்ரேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 13 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு எனினும் பெற்றோல் விலை அதிகரிப்பிற்கு ஏற்ற வகையில் ஓட்டோ கட்டணங்கள் உயர்த்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாணவனைத் தாக்கிய ஆசிரியர்!

வவுனியா, செப். 02

வவுனியாவில் 10ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் மீது அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தாக்கிய சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் மாணவன் மீது ஆசிரியர் ஒருவர் அண்மையில் காதில் அறைந்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குறித்த மாணவனின் செவியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவனை குறித்த ஆசிரியரே சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பாடசாலை அதிபர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வலயக்கல்வி அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் சு.அன்னமலர் தெரிவித்தார். (அ)

# மருந்து இறக்குமதியாளர்களுக்கு 13 பில்லியன் ரூபாய் நிலுவையில்!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 02

மருந்து இறக்குமதியாளர்களுக்கு 13 பில்லியன் ரூபா நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தொகையை செலுத்துவதற்கு திறைசேரியில் இருந்து நிதி கோரப்பட்டுள்ளதாகவும், குறித்து நிதியை கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நிலுவைத்தொகை செலுத்தப்படாமையினால் சில மருந்து இறக்குமதியாளர்கள் மருந்துகளை இறக்குமதி செய்வதில் தயக்கம் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை 161 ஆக குறைவடைந்துள்ளது என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மருந்து கொள்வனவுக்கான முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், அடுத்து வரும் சில வாரங்களில் பகுதி பகுதியாக மருந்துகள் இலங்கையை வந்தடையுமென சுகாதார அமைச்சு உறுதியளித்துள்ளது. (அ)

# எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் 2048 வரை கடன் சிக்கல் தீராது!

## கூறுகிறார் பந்துல குணவர்த்தன

கொழும்பு, செப். 02

எந்த தலைவரின் கீழ் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எதிர்வரும் 2048 ஆம் ஆண்டு வரை கடனை செலுத்துவது தொடர்பான நெருக்கடியில் இருந்து மீள முடியாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு கடனை திரும்ப செலுத்துவதை மறுசீரமைக்கும் வரை மாத்திரமே கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

30 ஆண்டு யுத்த நிலைமை காரணமாக வீழ்ச்சியடைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய திட்டங்களுக்கு அரசாங்கம் பெருந்தொகை நிதியை செலவிட்டது. இவை கடனாகவும் உதவியாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டவை.

நாடு என்ற வகையில் நாம் பெற்றுக்கொண்ட கடனை இன்னும் திருப்பி செலுத்தவில்லை என்ற காரணத்தினால், தற்போது பெரும் கடனை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளோம்.

வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் வரை நாட்டுக்கு எவ்வித வெளிநாட்டு கடன் உதவியையும் பெற முடியாது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் அபிவிருத்தித்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் கடன் உதவியை பெற்றுக்கொள்ள முடிந்தால் மாத்திரமே வீதிகள் உட்பட அனைத்து அபிவிருத்தி பணிகளையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும். இதற்கு எவ்வித அரசியல் தீர்வுகளும் இல்லை.

நாடு என்ற வகையில் நாம் செலுத்த வேண்டிய 36 பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்வரும் 2048 ஆம் ஆண்டு வரை செலுத்தியாகவேண்டும்.

இதனால், எந்த தலைவரின் கீழ் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் கடன் நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

தற்போது நடைபெறும் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல ஆசிய அபிவிருத்தி வங்கி 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது-என்றார். (அ)

# ‘ரக்ஷபந்தன்’ ராக்கி நூல் கல்முனையில் அணிவிப்பு

அம்பாறை, செப். 02

“ரக்ஷ பந்தன்” புனித ராக்கி நூல் அணிவிப்பும் விசேட இறை சொற்பொழிவும் கல்முனை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெற்றது.

50 வருட தவயோக அனுபவும் முதிர்ச்சியும் பெற்ற இராஜ யோகினி மஞ்சு அவர்கள் ‘பயமும் பதற்றமும் அற்ற வாழ்வு”, என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள் .

அதைத் தொடர்ந்து கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் “ரக்ஷபந்தன்” புனித நூல் அணிவிக்கப்பட்டது.

பிரசாதம் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. (அ)



# காத்தான்குடி பூர்வீக நூதனசாலை திருத்த பணிக்காக மூடப்படுகிறது!

மட்டக்களப்பு, செப். 02

காத்தான்குடி நகர சபையின் பராமரிப்பில் உள்ள புராதன நூதனசாலை சில தினங்களுக்கு மூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 04 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு திருத்த வேலைக்காக நூதனசாலை மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி புராதன நூதன சாலை தற்போது உரிய பராமரிப்பின்றி குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை வரலாற்றை பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இந்த பூர்வீக நூதனசாலைக்கு அன்றாடம் நாடு பூராகவும் பெரும் எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் வருகின்றனர்.

இந்த பிரமாண்டமான நூதனசாலை 90 வீத முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே அமைகிறது.

இலங்கை முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட ஆன்மீக, அறிவியல், வர்த்தக, வணக்க வழிபாடு, அரசியல் உட்பட பல் வேறு வரலாற்று சான்றுகள் இந்த நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.




பராக்கிரமபாகு மன்னரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம்களின் உருவங்களும் பதிவாக வைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், வியபாரா முறைகள், புராதன பள்ளிவாயல்கள், முதலாவது ‘வுளு’ செய்த இடம் உட்பட பல நூறு முஸ்லிம் கலாசாரம் தொடர்பான பூர்வீக அடையாளங்களும் இங்கு காணப்படுகின்றன.

இந்நூதனசாலையின் அறிவித்தல் பலகைகள் சேதமடைந்து காணப்படுவதுடன் பார்வையாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்ற எந்தவொரு வழிகாட்டலும் இன்றி உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சில காட்சி அறைகளில் துவாரங்க காணப்படுவதுடன் சில பொருட்கள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

தற்போது காத்தான்குடி நகர சபையின் பராமரிப்பில் உள்ள மேற்படி நூதனசாலை சில தினங்களுக்கு மூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 04 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு திருத்த வேலைக்காக நூதனசாலை மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் இலக்கிய நாடகத்தில் முதல் இடம்!



காரைதீவு, செப். 02

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியின் கிழக்கு மாகாண மட்ட போட்டிக்கு சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயம் இலக்கிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றுத் தெரிவாகி சாதனை படைத்துள்ளது.

மேற்படி, கல்முனை கல்வி மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரசன்னத்தில் நடைபெற்றது.

அங்கு இடம் பெற்ற இலக்கிய நாடகம் திறந்த போட்டியில் முதலாம் இடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலய பாடசாலை மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். (அ)

# அலுவலர்களுக்கான ஒருநாள் பயிற்சிநெறி

திருமலை, செப். 02

கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண பொதுச் சேவையிலுள்ள அலுவலகப் பணியாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி நெறி மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் திருகோணமலை காரியாலய கூட்ட மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒரு நாள் பயிற்சி நெறிக்கு மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் வளவாளராக கலந்து கொண்டு இப்பயிற்சி நெறியை நடத்தினார்.

இதன்போது, அரச பணியாளர்களின் கடமைப் பொறுப்புக்கள், கடமைகள், செயற்பாடு



கள், நடத்தைகள் போன்ற பல் வேறு விடயங்கள் பற்றிய பயிற்சிகள் நடாத்தப்பட்டதுடன், அவர்களுக்குள் செய்முறை பயிற்சியும், அறிமுகப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

அலுவலகப் பணியாளர்கள் தங்களின் அறிவுத்திறன்களையும் விருத்தி செய்த செய்கின்ற அதேவேளை, இன்றைய பயிற்சியில் பெற்ற விடயங்களை தங்களின் அலுவலகங்களில் அமுல்படுத்தி செயற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாம் பெற்ற பயிற்சியில் பிரதிபலன்களைக் கண்டுகொள்ளலாம் என கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரன் கேட்டுக் கொண்டார்.

மாகாண அமைச்சுக்கள், மாகாண திணைக்களங்கள், நிறுவனங்கள் போன்ற பல அரச காரியாலயங்களில் கடமையாற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி நடத்தப்பட்டது. (அ)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயிர்ச்செய்கைப் பொருட்கள் வழங்கல்



மட்டக்களப்பு, செப். 02

கிராமிய பொருளாதாரப் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் பயறு மற்றும் உழுந்து பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பாசிப்பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ மஜீட், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏ. எஸ். சபானா, வி.விஸ்வானந்தி, எம். ஏ. சிபானா ஆகியோரும் இதில் பங்கேற்றனர். (அ)

# ஓட்டமாவடியில் நேற்று மழை வேண்டி தொழுகை

மட்டக்களப்பு, செப். 02

வறட்சியான காலநிலை நீங்கி மழை பெய்யவேண்டும் என்று பிரார்த்தனை கேட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் ஓட்டமாவடி அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் தொழுகை நடத்தப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்குடா கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இத் தொழுகை மற்றும் உரையினை மௌலவி எம்.ஐ. றிஸ்வான் (நஹ்ஜி) நடத்தினர்.

இதில், ஓட்டமாவடி,



வாழைச்சேனை, மீராவோடை, காவத்தமுனை போன்ற பிரதேசங்களில் இருந்து பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

# பிரிட்டன் பாதுகாப்பு செயலர் பென் வாலேஸ் இராஜினாமா!

**லண்டன், செப். 02**

**பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளரான பென் வாலேஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.**

**அவர் தனது இராஜினாமா கடிதத்தை பிரதமர் ரிஷி சுனக்குக்கு அனுப்பியுள்ள நிலையில் அதை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார்.**

பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளரான பென் வாலேஸ் தனது பதவியை இராஜினாமா செய்ததற்கு பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

"உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கிக்கொண்டே இருக்க, பிரித்தானியா ஒன்றும் அமேசான் நிறுவனம் அல்ல" என நேட்டோ உச்சி மாநாடு ஒன்றில், பென் வாலேஸ் தெரிவித்ததை தொடர்ந்து சர்ச்சைகள் ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், அவரை நேட்டோவின் அடுத்த தலைவ



ராக்க எடுக்கப்பட்ட பிரித்தானியாவின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

தற்போது அமைச்சரவையில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்த பென் வாலேஸ், நேற்று காலை பிரதமர் ரிஷி சுனக்கிற்கு எழுதிய கடிதத்தில், 'நான் புறக்கணித்த வாழ்க்கையின் சில பகுதிகளில் முதலீடு செய்வதற்காகவும், புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்காகவும் பதவி விலகுகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், நீண்ட காலமாக அமைச்சராக இருக்கும் கிராண்ட் சப்ஸ் அடுத்த பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அவுஸ்திரேலியர்களின் ஓய்வு வயது அதிகரிப்பு



கான்பரா, செப். 02

புள்ளியியல் பணியகத்தால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவு சராசரி ஓய்வூதிய வயது தற்போது 56 வயதுக்கு மேல் உள்ளது என்பதைக் காட்டுகிறது.

2018 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலிய பெண்களின் சராசரி ஓய்வு வயது 52 ஆக இருந்தது. தற்போது அது 54 ஆக உயர்ந் துள்ளது.

2020 இல் 140 ஆயிரம் பேர் 64 வயதில் ஓய்வு பெற்றுள்ளனர்.

ஆனால் தற்போதும் ஆண்களுக்கான ஓய்வு வயது 59 ஆகவே உள்ளது. ஆனால் சில மாதங்களில் இந்த எண்ணிக்கை குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

2020 முதல் 2021 காலப்பகுதிக்குள் ஓய்வு பெற்றவர்களில் 56 வீதமானோர் பெண்களாவர்.

இது ஆண்களை விட பெண்களே அதிகளவவில் ஓய்வு பெற்றுள்ளதை குறிக்கிறது.

அடுத்த 5 ஆண்டுகளில் 673,000 பேர் ஓய்வு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பிரான்ஸில் 'பைரோலா' வைரஸ் முதல் தொற்றாளர் அடையாளம்

## சுகாதாரத் துறை உஷார்

பாரிஸ், செப். 02

பிரான்ஸில் ஒமெக்ரோன் வைரஸ் குடும்பத்தின் பிஏ2. 86 என்ற உப திரிபு தொற்றிய முதலாவது நோயாளி நாட்டின் பரந்த கிழக்குப் பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொதுச் சுகாதாரத் துறையை ஆதாரம் காட்டி செய்தி ஊடகங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன. கொரோனா தடுப்பூசிகளாலும் ஏற்கனவே ஏற்பட்ட தொற்றுக்களினாலும் மனித உடல் பெற்றுக் கொண்ட நோய் எதிர்ப்புச் சக்தியை மீறிப் பரவக் கூடியது என்று நம்பப்படுகின்ற ஆபத்தான இந்தத் திரிபை உலக சுகாதார நிறுவனம் மற்றும் அமெரிக்கத் தொற்றுநோய்த் தடுப்புத் துறையைச் சார்ந்த நிபுணர்கள் மிகத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

சமூக ஊடகங்களில் "பைரோலா" எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்ற இந்தப் புதிய உப-திரிபு கடந்த மாத நடுப்பகுதியில் அமெரிக்கா, ஜப்பான், இஸ்ரேல், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் பரவியிருப்பது கண்டறியப்பட்டது. சில தினங்களுக்கு முன்பு ஸ்பெயினிலும் பரவுவது தெரிய வந்தது.

பைரோலா திரிபு மிக அதிக எண்ணிக்கையான பிறழ்வுகளைக் கொண்டிருப்பதால் நோய்க்காப்புச் சக்திக்குத் தப்பி வேகமாகப் பரவக் கூடும் என்று தொற்றுநோயியல் நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனினும் உலகெங்கும் கோவிட் வைரஸ் திரிபுகளின் மரபுவரிசைகளை ஆய்வுசெய்து கண்காணிக்கின்ற செயற்பாடுகள் கைவிடப்பட்டு விட்டதால் சர்வதேச அளவில் பைரோலா தொற்று பற்றிய தரவுகள் போதுமான அளவு பெறப்ப



டவில்லை.

பிஏ2. 86 திரிபின் (பைரோலா) தாக்கம் என்ன என்பது இன்னமும் தெரியவராத ஒன்றாகவே உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனம், கண்காணிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் விழிப்பாகச் செயற்படுமாறு நாடுகளைக் கேட்டிருக்கிறது.

குளிர்காலம் ஆரம்பமாகவுள்ள சமயத்தில் பைரோலா மூலம் நாட்டில் புதிய தொற்றலை உருவாகலாம் என்று பிரான்ஸின் பொதுச் சுகாதாரத் துறை எதிர்பார்த்துள்ளது.

புதிய திரிபு வைரஸ் குறித்து இந்தக் கட்டத்தில் உடனடியாக அச்சப்பட எதுவும் இல்லை. தொற்று ஏற்பட்டால் கட்டாய தனிமைப்படுத்தல் விதிகள் எதுவும் தற்சமயம் அமுலில் இல்லை.

பொது அறிவின் அடிப்படையில் தங்களைத் தாங்களாகவே தனிமைப்படுத்திக் கொள்வதும் வயோதிபர்கள், குழந்தைகள், தீவிர நோயாளிகளை நெருங்குவதைத் தவிர்த்துக் கொள்வதும் அவசியம் . கடுமையான நோய் அறிகுறிகள் இருந்தால் அன்றிப் பணியிடங்களுக்குச் செல்வதற்குத் தடை இல்லை. தேவை ஏற்பட்டால் மருத்துவரை அணுகி வழக்கமான சுகயீன லீவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கி உள்ளனர். (அ)

# 'நான் உயிருடன் இருக்கின்றேன்'

## வாக்னர் குழு தலைவர் வெளியிட்ட காணொலியால் பெரும் பரபரப்பு

மொஸ்கோ, செப். 02

ரஷ்யாவில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்ததாக உறுதி செய்யப்பட்ட வாக்னர் குழுவின் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜினின் உயிருடன் இருக்கும் காணொளி ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனின் உள் விவகார அமைச்சர் அன்டன் ஜெராஷ்செங்கோவின் ஆலோசகரால் வெளியிடப்பட்ட பிரிகோஜினின் காணொளி, வாக்னர் தலைவரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற சில நாட்களுக்குப் பிறகு அவரது மரணம் பற்றிய கூற்றுக்களை மறுத்துள்ளது.

"நான் உயிருடன் இருக்கிறேனா இல்லையா, நான் எப்படி இருக்கிறேன் என்று சிலர் விவாதித்து வருகிறார்கள். நான் இப்போது ஓகஸ்ட் 2023 பிற்பகுதியில் ஆபிரிக்காவில் இருக்கிறேன்.

என்னை அழிக்கச் சிலர் நினைக்கிறார்கள். என்னை முற்றிலுமாக அழிக்கவே விரும்புகிறார்கள். பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

26 விநாடிகள் கொண்ட இந்த காணொளியில் அவர் ரஷ்ய மொழியில் பேசியுள்ளார். காணொளியின் இறுதியில் அவர் கமெராவை நோக்கி கையசைத்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த காணொளி பதிவு செய்யப்பட்ட நேரம் மற்றும் இடம் என்பன இதுவரையில் சரிபார்க்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் மொஸ்கோவிற்கு வடக்கே ஒரு விமான விபத்தில் பிரிகோஜின் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட



சில நாட்களுக்குப் பிறகு இந்த காணொளி வெளியாகியுள்ளது.

விமானத்தில் இருந்த 10 பேரும் கொல்லப்பட்டதாகவும், ரஷ்யாவின் விசாரணைக் குழு இதனை உறுதிப்படுத்தியது.

விபத்து நடந்த தளத்தில் மீட்கப்பட்ட 10 உடல்களும் தடயவியல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டதாக விசாரணைக் குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

அவர்களின் அடையாளங்கள் ஒத்துப்போகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பிரிகோஜினின் சொந்த நகரமான செயின்ட் பீற்றர்ஸ்பர்க்கில் அவருக்கான தனிப்பட்ட இறுதிச் சடங்கும் நடைபெற்றது.

"யெவ்ஜெனி பிரிகோஜினின் இறுதிச் சடங்குகள் ஒரு மூடிய அமைப்பில் நடைபெற்றது. எவ்வாறாயினும், 62 வயதான கூலிப் படைத் தலைவர் புதைக்கப்பட்டாரா என்பது குறிப்பிடப்படவில்லை.

ப்ரிகோஜின் புடினின் முக்கிய கூட்டாளியாக இருந்தார். ஆனால் கடந்த ஜூன் மாதம் புடினுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தோல்வியுற்ற கலகத்தை நடத்திய பின்னர் அவர்களது உறவு மோசமடைந்தது.

பிரச்னை தீர்க்கப்பட்டாலும், ரஷ்யா-உக்ரைன் போருக்கு இடையே புடினின் தலைமையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக இந்த அத்தியாயம் இருந்ததாக பாதுகாப்பு வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# '13' தொடர்பில் மகிந்த மௌனம் காப்பது ஏன்?

## உதய கம்மன்பில கேள்வி



கொழும்பு, செப். 02

**"மரணித்துப்போன 13ஆவது திருத்தத்துக்கு உயிரூட்டும் வகையில் '13 பிளஸ்' என்று கூறி கதைவிட்ட மகிந்த ராஜபக்ஷ இப்போது ஏன் மௌனமாக இருக்கின்றார்?"**

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த ராஜபக்ஷ, 13 பிளஸ் என்று தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியமையால்தான் 2015இல் தோற்கடிக்கப்பட்டார். அந்த வலியை உணர்ந்துதான் இப்போது அவர் "13" தொடர்பில் வாய் எதுவும் திறக்காமல் உள்ளார் என்று நாம் நினைக்கின்றோம்.

அவரின் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள்தான் "13" தொடர்பில் பேசுகின்றார்கள். ஆனால், கட்சித் தலைவரான மகிந்த எந்தக் கருத்தையும் வெளியிடாமல் அமைதி காக்கின்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கமாட்டார். ஏனெனில் மகிந்தவுக்கு நடந்தது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கும் நடக்கும் என்ற அச்சம் ரணிலுக்கு இருக்கும். இதை அவருக்கு நாம் எச்சரிக்கையாகவே முதலில் தெரிவித்துவிட்டோம்."

- என்றார். (அ)

# யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி மூன்று தினங்கள் கலாசார மண்டபத்தில்



யாழ்ப்பாணம், செப். 02

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ், அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கையில் உள்ள 20 தொழிற்சாலைகளில் 300க்கும் மேற்பட்ட அரங்குகளில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்திற்கே உரித்தான பல கைத்தொழில்களை தொழில் கண்காட்சியில் காண கூடியதாகவுள்ளது. (அ)

# ஒரு லட்சத்து 70,000இற்கு மேற்பட்டோர் முதல் காலாண்டில் வெளிநாடு பறந்தனர்!

கொழும்பு, செப். 02

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு சென்றுள்ளனர்.

ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 71ஆயிரத்து 15 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்று வெளியேறியுள்ளனர்.

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் மட்டும் 24 ஆயிரத்து 578 பேர் வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் 2022 இல் வெளிநாட்டு வேலைக்காக வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 11 ஆயிரத்து 56 ஆகும்.

இதற்கிடையில், ஜூலை மாதத்தில் உத்தியோகபூர்வ வழிகள் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களினால் அனுப்பட்ட பணம் 541 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப்பகுதியில் அனுப்பட்ட மொத்த பணம் 3,363.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக் காலம் இம்மாதம் 15 வரை நீடிப்பு!

கொழும்பு, செப். 2

மனித உரிமைகள் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழிகளை மதிப்பிடுவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பான இறுதி அறிக்கையை பூர்த்தி செய்வதற்காகவே ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பல தடவைகள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது.

மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் மற்றும் பிற குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக்குழுக்கள் அல்லது குழுக்களின் கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து, விசாரித்து அறிக்கை அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய 2021 ஜனவரி 21 ஆம் திகதி இந்த ஆணைக்குழுவை நியமித்தார்.

உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையிலான இந்த ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதியும் இரண்டாவது அறிக்கை 2022 பெப்ரவரி 18 ஆம் திகதியும் முன்னாள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக இரண்டு எம்.பிக்கள் மனு தாக்கல்!

கொழும்பு, செப். 02

தரமற்ற அல்லது அங்கீகரிக்கப்படாத மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை மீண்டும் மீண்டும் இறக்குமதி செய்ய அனுமதித்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு, சுகாதார அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுயாதீன விசாரணைக் குழுவை அமைக்க உத்தரவிடக் கோரி இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

சாதாரண கொள்முதல் செயல்முறை, சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் முறையான ஆராய்ச்சியின்றி, மருத்துவமனைகளுக்கு இந்த மருந்துகளை வழங்குவதற்கும், பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் இவர்கள் அனுமதித்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தின் 109 ஆவது பிரிவைச் சாதகமாகப் பயன்படுத்தி, அவசரகாலச் சட்டத்தின் கீழும் அதன் பிரகாரமும், இலங்கைக்கு மருந்துப் பொருட்களைத் தொடர்ந்து கொண்டு வருவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# சஜித் ஜனாதிபதி, அநுரகுமார பிரதமர் கூட்டணிக்கான யோசனை முன்வைப்பு

கொழும்பு, செப். 02

"சஜித் ஜனாதிபதி, அநுர பிரதமர்" என்ற இணக்கப்பாட்டுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் தயாராக வேண்டும் என்று சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

" மகிந்த மற்றும் ரணிலால் இணைந்து செயற்பட முடியுமென்றால், அநுர, சஜித்தால் ஏன் இணைந்து செயற்பட முடியாது? ஒன்று சஜித் ஜனாதிபதி, அநுர பிரதமர், அவ்வாறு இல்லாவிட்டால் அநுர ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற இணக்கப்பாட்டுடனேயே அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். அவ்வாறு அதற்கு சுதந்திர மக்கள் சபையின் ஆதரவும் வழங்கப்படும். தனித்து செயற்படுவதைவிட கூட்டாக செயற்படுவதே சிறந்தது." - என்றார். (அ)

# தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 43ஆவது நினைவு தினம் மன்னாரில்



மன்னார், செப். 02

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவு தினம் இன்று காலை மன்னாரில் நினைவு கூரப்பட்டது. இதன்போது மன்னார் பஜார் பகுதியில் உள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இந்த நினைவேந்தல் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், கலையருவி இயக்குநர் அருட்தந்தை செல்வநாயகம் அடிகளார்,மன்னார் தமிழ் சங்கத்தின் பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

## 13ஆவது திருத்தச் சட்டம்...

அத்துடன், 13ஆவது திருத்தம் தீர்வல்ல என்று தமிழ்த் தரப்புகளா லேயே சொல்லப்படுகின்றது. இனப் பிரச்னைக்கு தீர்வை ரணில் விக்கிரம சிங்க கொடுப்பதாக உலகத்துக்குக் காட்டிக்கொள்ள வேண்டிய நேரத்தில் நாம் ஏன் 13ஆம் திருத்தத்தைப் பற்றிக் கதைக்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

டான் தமிழ்ஒளி தொலைக்காட்சி யின் 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அதில், அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

13ஆவது திருத்தச் சட்டம் அரச மைப்பிலேயே இல்லை. 13 அரசமைப் பில் இருக்கிறதா இல்லையா என்று ஆய்வுசெய்யக்கூடிய - அது சம்பந்தமாக முடிவாக சொல்லக்கூடியது உச்சநீதிமன் றம். அந்த உச்சநீதிமன்றம் 1987ஆம் ஆண்டே தனது தீர்ப்பில் அதிகாரப் பகிர்வு ஒற்றையாட்சிக்குள் கிடையாது என்று சொல்லியுள்ளது. 13ஆம் திருத் தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் அதிகாரப் பகிர்வு கிடையாது. அதிகா ரங்கள் முழுக்க முழுக்க கொழும்பின் (மத்திய அரசின்) கையிலேயே இருக்கும்.

அந்த 9 நீதியரசர்கள் கொண்ட (பெரும்பான்மையானவர்களின்) தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு கிட்டத்தட்ட 30 தீர்ப்புகள் வந்துள்ளன. இதில், 2014ஆம் ஆண்டு சோழமுத்து இராசனின் வழக்கில் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்பில் - மத்திக்கும் மாகா ணத்துக்கும் இடையிலே 13ஆம் திருத் தத்தில் முரண்பாடு வரமுடியாது. ஏனென்றால், சட்டம் மிகத் தெளிவு - மத்தியின் கையில் மட்டுமே அதிகாரம். மாகாணத்துக்கு அதிகாரம் கிடையாது. காணி அதிகாரம் தொடர்பிலேயே மிக விசேடமாக இந்தத் தீர்ப்பு அமைந்தது. தீர்ப்புகள் இப்படி மிகத் தெளிவாக சொல்லப்பட்டுள்ள நிலையிலே 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்று சொல்வது அப்பட்ட மான பொய். அதை சொல்வதற்கான காரணம் 13ஆம் திருத்தம் நடைமுறையில்தான் இருக்கிறது - உள்ளேதான் இருக்கிறது என்று வெளி யில் சொன்னால், 13இல் ஒரு பிரயோச னமும் இல்லை என்று மக்களே விளங் கிக் கொள்வார்கள் என்பதுதான்.

இதன்போது குறுக்கிட்ட நெறியா ளர்கள், ஆனால், 13இன் ஊடாக பல விடயங்களை தடுத்துள்ளோம். காணி, பொலிஸ் அதிகாரத்தை தந்தால் சில வற்றை செய்யலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் பலர் இந்த விடயங்களை ஏற்றுக்கொள்கிறார்களே என்று கேட்டபோது,

"அவர்களை என்னுடன் விவாதிக்க வையுங்கள். என்னையும் வைத்துக் கொண்டு சொல்லட்டும் - அவர்கள் கூறும் அப்பட்டமான பொய்யை நேரடி யாக தட்டிக்கேட்க ஒருவரும் இல்லா மல் பொய்யை ஏற்கிறார்கள். விவாதம் நடந்தால் தெரியும். ஆனால், இதனை நான் மட்டும் கதைக்கும்போது பொய் யாக தெரியலாம் என்றவர், 1987 உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும், 2014 சோழமுத்து இராசன் தனது காணி தொடர்பில் தொடுத்த வழக்குகளின் தீர்ப்பையும் வாசித்துக் காட்டினார்.

தொடர்ந்து, உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகு மற்றவர்கள் கூறும் விட யத்தைக் கணக்கெடுக்கத் தேவையில்லை - என்றார்.

இதைத் தொடர்ந்து, 13ஆவது திருத் தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வலி யுறுத்தும் இந்தியாவுக்கும் இந்த விடயம் தெரியாதா என்று நெறியாளர் கேட்கை யில்,

இது இந்தியாவுக்கும் தெரியும். இந் திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங் கர் கொழும்பில் தமிழ் கட்சிகளை சந்தித் தார். இலங்கைக்கான இந்தியத் தூ துவரும் உடன் இருந்தார். அப்போது, இந்த விடயங்களை நான் அவர்களுக்கு சுட்டிக்காட்டினேன். இந்திய வெளிவிவ கார அமைச்சர் இதனை மறுதலிக்க வில்லை. அப்போது அங்கிருந்த சுமந் திரன் உள்ளிட்டவர்களும் நான் கூறுவது தவறு என்று சுட்டிக்காட்டவில்லை.

13ஐ வலியுறுத்தும் தரப்புகளே 13 தீர்வல்ல என்று சொல்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்வைக் கொடுப்ப தாக உலகத்துக்குக் காட்டிக்கொள்ள வேண்டிய நேரத்தில் நாம் 13ஆம் திருத் தத்தை பற்றி ஏன் கதைக்க வேண்டும் - என்றும் கேட்டார்.

கஜேந்திரகுமார் எம். பியின் முழுமை யான நேர்காணலை டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு காணமுடியும். (ஐ)

## இந்திய...

பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்த இருந்தார்.

அத்துடன், நுவரெலியா, திருகோண மலைக்கும் செல்லவிருந்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு நட்புறவு தொடர்பிலும் பேசவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்.மாவட்ட...

சங்கம், அனலை தீவு கடற்றொழிலாளர் சங்கம், நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கம். யாழ் மாவட்ட கடற் றொழிலாளர் சங்கம் உள்ளிட்டவை பங்கேற்றன.

போராட்டத்தின் நிறைவில் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரனிடம் மனு ஒன்றையும் போராட்டக்காரர்கள் கையளித்தனர். (ஐ)

## பாதிக்கப்பட்...

இந்த பெயர் குறித்து கேள்வி எழுப்பி யுள்ளார். ஊடகங்கள் இருப்பதால் தன்னால் விவரங்களை வெளியிட முடி யாது என்று குறிப்பிட்டுள்ள சாட்சி எழுத்தில் அது குறித்த விடயங்களை வழங்கியுள்ளார் - என்றும் கர்தினால் மேலும் தெரிவித்தார். (ஐ)

## யாழ்.வம்சாவளி...

பேர் தகுதி பெற்றிருந்தனர். நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பமான வாக்குப் பதிவு நேற்றிரவு 8 மணி வரை தொடர்ந் தது. இதில், தர்மன் சண்முகரத்தினம் 70.4 வீத வாக்குகளை பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எங் கோக் சோங் 15.7 வீத வாக்குகளையும் டான் கின் லியான் 13.88 வீத வாக்குகளையும் பெற்றனர்.

2001 ஆம் ஆண்டு மக்கள் செயல் கட்சியின் ஊடாக அரசியலுக்கு வந்த தர்மன் சண்முகரத்தினம். வணிகத்துறை அமைச்சர், கல்வி அமைச்சராகவும் பதவி வகித்தார். 2006ஆம் ஆண்டு நிதி அமைச்சராகவும் பணியாற்றியிருந்தார். 2011 - 2019ஆம் ஆண்டு வரை துணைப் பிரதமராக பணியாற்றினார்.

தற்போது ஹலிமா யாக்கோப் சிங்கப் பூரின் ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். இவரின் பதவிக்காலம் எதிர்வரும் 13ஆம் திகதி நிறைவுறுகிறது. இதைத் தொடர்ந்து 9ஆவது ஜனாதிபதியாக சண்முகரத்தினம் பதவியேற்பார். (ஐ)

## பஸ்...

முதல் இந்தக் கட்டண அதிகரிப்பு நடை முறைக்கு வந்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித் துள்ளது.

குறைந்தபட்ச பேருந்து கட்டணத் தில் எந்த மாற்றமும் இல்லை. அதிவேக பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட வுள்ளதாகவும் மேலும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# யாழ். பேருந்து நிலையத்தில் 24 மணி நேர சேவை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 02

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலை யம் நேற்று வெள்ளிக்கிழமை முதல் 24 மணி நேர சேவை ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிராந்தியத்தின் செய லாற்று முகாமையாளர் லம்பேட் தெரி வித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட பிற மாவட் டங்களுக்கு இடையிலான போக்குவ ரத்தை யாழ். மாவட்டத்தில் இருந்து மையப்படுத்தி இலங்கை போக்குவரத்து சபை தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

அவை, பகல் வேளைகளிலும் இரவில் ஆகக் கூடுதலாக 10 மணி வரையிலான காலப்பகுதிக்கான அட்டவணை நிரலின் அடிப்படையில் சேவையை மேற் கொண்டு வந்தது. இந்நிலையில் தற் போது சேவையை 24 மணிநேரமும் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக நேரக் கணிப்பாளர்கள் மற்றும் ஆளணிகள் குறித்த சேவைக்காக நியமிக்கப்பட்டு , இந்த சேவை ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இதனால் தூர இடங்களில் இருந்து வரும் பயணிகள் இதுவரை காலமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வந்த நிலையில் அதற்கான தீர்வு தற்போது கிடைக்கப் பெற்றுள்ள துடன் தமது பயணங்களை இலகுவாக வும் தடைகளின்றியும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

மேலும், யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் ஒருங்கிணைப்பு குழு தலைவரு மான டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உணவு பாதுகாப்பின்மையால்...

கணக்கெடுப்பின் மூலம் இந்த அறிக்கைக்கான தரவு சேகரிக்கப்பட்ட தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட் டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துடன் இணைந்து தயாரிக்கப் பட்ட வறுமை சுட்டெண் மற்றும் பல பாதிப்பு சுட்டெண் வெளியீட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றதுடன், இந்த நிகழ் வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், "உலக வங்கி அறிக்கைகளின் படி, 2021 மற்றும் 2022 க்கு இடையில் ஒரு வருடத்தில் வறுமை விகிதம் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித் துள்ளது. உலக உணவுத் திட்டத்தின் அறிக்கைகளின்படி ஆறு மில்லியன் இலங்கையர்கள் உணவு பாதுகாப்பின் மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2022 இன் மிகை பணவீக்க காலத்தில் பல ருக்கு உணவுக்கான அணுகல் மற்றும் கிடைக்கும் தன்மை குறைவாக இருந்தது.

இந்த சிரமங்கள் அவற்றின் செல் வாக்கு பரவியதால் தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையே வேறுபாடுகள் ஏற்பட வழிவகுத்தது.

"அரசாங்கத்தால் பல சீர்திருத்த செயல்முறைகள் செயல்படுத்தப்படும் போது, அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைப் புரிந்துகொள்வது நமது பொறுப்பாகும். இந்த அறிவு இடைவெளியை நிரப்ப, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் முதன்முறையாக 2022-23 தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பைத் தொடங்கியது.

நாடு முழுவதும் உள்ள 25 ஆயிரம் குடும்பங்கள் எதிர்கொள்ளும் உண்மை களை இது வெளிப்படுத்தியுள்ளது" - என்றும் அவர் கூறினார். (ஐ)

## வட,கிழக்கில்...

மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்ரோபர் 13 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் முதல்நாள் அமர்வில் இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட வுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கருத்து ரைக்கையிலேயே க. வி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட் டத்தொடரில் முன்னைய அமர்வுகளின் போது இலங்கையிடம் எதிர்பார்க்கப் பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவை உரியவாறு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளனவா என்பது பற்றி ஆராயப்படும்.

குறிப்பாக, மனித உரிமைகள் பேரவையின் முன்னைய அறிக்கையில் பாதுகாப்பு துறைசார் செலவினங்களைக் கட்டுப்படுத்தல், ஊழலை இல்லா தொழித்தல், கடந்தகால மனித உரிமை கள் மீறல் தொடர்பில் நியாயமான விசாரணைகளை மேற்கொள்ளல், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து நியாயமான விசார ணைகளை மேற்கொள்ளல், வட- கிழக்கில் படையினரின் எண்ணிக்கை யைக் குறைத்தல், படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், பயங்கர வாதத்தடைச்சட்டத்தை சர்வதேச நிய மங்களுக்கு அமைவாகத் திருத்துதல் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல் உள் ளிட்ட முக்கிய விடயங்கள் வலியுறுத் தப்பட்டன.

எனவே, இவற்றை நடைமுறைப்படுத் துவதில் நிலவும் தாமதம் குறித்து இம் முறை ஆராயப்படும். அதேவேளை எதிர் வரும் கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட வுள்ள உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், தற்போது வட, கிழக்கில் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்படவேண்டும்.

அதிலும் குறிப்பாக குருந்தூர், தையிட்டி, செட்டிக்குளம், நாவற்குழி போன்ற இடங்களில் அரச அனுசர ணையுடன் காணி அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன என்ற உண்மை வெளிக்கொணரப்படவேண்டும்.

அதேபோன்று ,அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரி வித்து பௌத்த பிக்குகள் போராட் டங்களில் ஈடுபடுகின்றனர். இருப்பினும், சில அரசியல் காரணங்களுக்காக சிங்கள - பௌத்த அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குகின்றது.

எனவே, இதுபற்றி உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிடப்படுவதுடன், அரசின் இத்தகைய செயல்பாடுகள் நாட்டின் எதிர்கால நலனுக்கு எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பற்றி சுட்டிக்காட்டப்படவேண்டும்.

மேலும் உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்து வதில் தொடர் காலதாமதம், வட- கிழக்கு மாகாணங்களில் உயர் பதவிக ளுக்குத் தமிழ் தெரியாத சிங்களவர்கள் நியமிக்கப்படல் என்பன பற்றியும் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் உள்வாங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் ஒரு இலட்சம் பேர் வரை காணாமல் ஆக்கப்பட்டிருக்கக்கூடும்!

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 02

**இலங்கையில் உள்நாட்டுப்போருடன் தொடர்புபட்டவகையில் 60,000-100,000 பேர் வரையில் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கக்கூடும் என்றும், இருப்பினும் அவற்றில் பெரும்பான்மையான சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை விசனம் வெளியிட்டுள்ளது.**

வருடாந்தம் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு பல்வேறு உலக நாடுகளின் 'வலிந்து காணாமலாக்கப்பட்டோர்' நிலவரத்தை உள்ளடக்கி சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கை விவகாரமும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையில் கடந்த 40 வருடகாலமாக நடைபெற்ற உள்நாட்டுப்போருடன் தொடர்புபட்டவகையில் சுமார் 60,000-100,000 பேர் வரையில் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கக்கூடுமென தாம் மதிப்பிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள மன்னிப்புச்சபை, இருப்பினும் இவற்றில் பெரும்பான்மையான சம்பவங்கள் தொடர்பில் இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்துவதுடன் நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி கடந்த 6 வருடகாலமாகத் தொடர்ச்சியாகக் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்' என்று குறிப்பிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல்போன சம்பவம் தொடர்பில் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி அவரது அலுவலகத்திலிருந்து புறப்பட்டதன் பின்னர் காணாமல்போனார். அவர் காணாமல்போவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விமர்சித்து கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் பல வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், பிரகீத் எக்னெலிகொடவுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்படவில்லை. எனவே இதுகுறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், பிரகீத் எக்னெலிகொட காணாமல்போனமைக்குக் காரணமானவர்களை சட்டத்தின்முன் நிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்' என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (அ)

# உயர்தர பரீட்சை முடிவுகள் அடுத்த வார தொடக்கத்தில்!

கொழும்பு, செப். 02

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வார தொடக்கத்தில் வெளியிடப்பட உள்ளதாக பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வார இறுதியில் முடிவுகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்போதைய சூழ்நிலையால் அந்த இலக்கை அடைய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# அமெரிக்க தூதுவர் ஜூலிக்கு எதிராக வெளிவிவகார அமைச்சிடம் முறையீடு

கொழும்பு, செப். 02

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், வியானா உடன்படிக்கையின் இராஜதந்திர எல்லைகளை மீறியுள்ளதாக குற்றஞ்சாட்டி தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பினர் வெளிவிவகார அமைச்சிடம் கடிதமொன்றை நேற்று கையளித்தனர்.

66 அமைப்புகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டதாக கூறப்படும் இந்த கடிதத்தின் பிரதியை தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பினர் வெளிவிவகார அமைச்சுக்கு சென்று கையளித்தனர்.

வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதியொருவர் கடிதத்தை பெற்றுக்கொண்டார். (அ)

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை



கொழும்பு, செப். 02

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் காரணமாகவே தாம் மாகாண முதலமைச்சராக செயற்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளதாகவும் கூறினார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் வீட்டு உரிமையாளர்களுக்கான இலவச உறுதிப்பத்திரங்கள் மற்றும் வீட்டுக் கடன் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் நேற்று இதனை தெரிவித்தார்.

மாகாண சபைக்கே நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் எப்போதும் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், கொழும்பில் கல்வி அமைச்சராக இருந்து கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்விப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது எனவும் தெரிவித்தார். (அ)

# கெஹலியவுக்கு எதிரான பிரேரணை சபையில் மூன்று நாள்கள் விவாதம்!

கொழும்பு, செப். 02

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை தொடர்பான விவாதத்தை மூன்று தினங்களுக்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தின்போது, இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில், சுகாதார அமைச்சருக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், 8ஆம் திகதியன்று மாலை 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# இந்திய இழுவைப் படகு விடயத்தில் தீர்வு இன்றேல் தொடர் போராட்டம்!

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 02

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய இழுவை மடிப் படகுகள் விவகாரத்துக்கு உரிய தீர்வு இன்றேல் தொடர் போராட்டம் வெடிக்கும் என யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் ஸ்ரீகந்தவேல் புனிதப்பிரகாஷ் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை எதிர்த்து யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்தினால் நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய இழுவை மடிப் படகுகள் எல்லையினை தாண்டி அத்துமீறி எமது தொழிலாளர்களினுடைய வளங்களையும் வாழ்வாதாரங்களை சீரழித்துக் கொண்டு வருகின்றது. இந்நிலையில் அதற்கெதிராக பல ஆண்டு காலமாக பல முயற்சிகளை நாங்கள் எடுத்திருந்தும் பல பேச்சு வார்த்தைகளை நடத்தியிருக்கிறோம். அத்துடன் பல தடவைகள் ஆர்ப்பாட்டங்களை செய்துள்ளோம். இருந்தபோதும் இதுவரைகாலமும் ஒரு வீதமான ஆக்கபூர்வமான தீர்வு எங்களுக்கு கிடைக்காத காரணத்தால் இன்று நாங்கள் நீண்ட நாட்களுக்கு பிறகு ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்திருக்கின்றோம்.

அமைதி முறையிலான இந்த ஆர்ப்பாட்டம் வெகுவிரைவில் ஒரு தீர்வை பெற்று தரவேண்டும் என்றுதான் ஜனாதிபதியிடமும், அமைச்சரிடமும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அரச அதிபர் ,இந்திய துணை தூதுவர், இதுபோல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாரிடமும் இந்த கோரிக்கைகளை முன்வைத்து நிற்கிறோம். உடனடியாக இதுக்குரிய தீர்வு ஒன்றை பெற்று தரவேண்டும் என்றும் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளவிருப்பதாகவும் மாகாண ரீதியாகயும் மாவட்ட ரீதியாகவும் பல எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுகக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, வடமாகாணத்தைச் சேர்ந்த மீனவ பிரதிநிதிகள் 15 பேர் சேர்ந்து கடல்வழியாக இந்தியா தமிழ் நாடு சென்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை ஐயாவையும் தமிழக ஆளுநரையும் சந்தித்து உடனடியாக சென்று அழுத்தத்தை கொடுத்து எங்களுக்கான தீர்வினை நேரடியாக சென்று பெறுவதற்கு அடுத்த கட்ட முயற்சி செய்வதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் .

எங்களுக்கு 14, 15 நாட்களுக்குள் ஆக்கபூர்வமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் நாங்கள் சொன்னது போன்று கடல் வழியாகச் சென்று அங்கே போராட்டத்தையும் செய்ய வேண்டும்.

விரைவிலே இந்தியாவின் முக்கிய பிரதிநிதி ஒருவர் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். அவரிடம் ஜனாதிபதி , அமைச்சர் அதேபோல் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரின் வேதனைகளை தெரியப்படுத்தி உடனடியாக எங்களுக்கு தீர்வினை பெற்று தர வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆசியக் கிண்ணத் தொடர்:

# 5 விக்கெட்களால் பங்களாதேஷை வெற்றி கொண்டது இலங்கை அணி!



பல்லேகலை, செப். 02

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது போட்டியில் இலங்கை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது.

கண்டி - பல்லேகலை மைதானத்தில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் முதலில் ஆடிய பங்களா தேஷ் 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுக்க, அடுத்து ஆடிய இலங்கை 5 விக்கெட்கள் இழப்புக்கு 165 ஓட்டங்கள் சேர்த்து வென்றது.

பங்களாதேஷின் துடுப்பாட்டத்தில் நஜ்முல் ஹூசைன் ஷான்டோ தனியொருவராக போராடி சேர்த்த ஓட்டங்க ளாலேயே அந்த அணி ஓரளவு ஓட்டங்களை சேர்த்தது.

இலங்கையின் பந்துவீச்சில் மதீஷ பதிராண பங்களா தேஷின் துடுப்பாட்ட வரிசையை திணறடித்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு சதீர சமர விக்ரம, சரித் அசலங்க ஆகியோர் சிறப்பாக ஓட் டங்களை சேர்த்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

முன்னதாக நாணயசு சுழற்சியில் வென்ற பங்களா தேஷ் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அணியின் தரப்பில் அதிகபட்சமாக நஜ்முல் ஹூசைன் 7 பௌண்ட் ரிகள் உட்பட 89 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். தௌஹித் ஹிருதய் 20, முகமது நயிம் 3 பௌண்ட்ரி களுடன் 16, முஷ்ஃபிகர் ரஹிம் ஒரு பௌண்ட்ரியுடன் 13 ஓட்டங்கள் அடித்தனர்.

அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் ஒரு பௌண்ட்ரி யுடன் 5, மெஹிதி ஹசன் மிராஸ் 5 ஓட்டங்களே எட்ட, தன்ஸித் ஹசன், தஸ்கின் அகமது, முஸ்டாபிஹூர் ரஹ்மான் ஆகியோர் டக் அவுட் ஆகினர். முடிவில் ஷோரிபுல் இஸ்லாம் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கா மல் இருந்தார்.

இலங்கை பந்துவீச்சாளர்களிலர் பத்திரன 4, மஹீஷ் தீக்ஷனா 2, தனஞ்ஜெய டி சில்வா, துனித் வெலாலகே, டாசன் ஷானக ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர், இலங்கை இன்னிங்ஸில் சதீர சமர விக்ரம 6 பௌண்ட்ரிகள் உள்பட 54 ஓட்டங்கள் சேர்த்து அணி யின் வெற்றிக்கு அடித்தளமிட்டார். எனினும், பதும் நிசங்க ஒரு பௌண்ட்ரியுடன் 14, திமுத் கருணாரத்ன 1, குசல் மெண்டிஸ் ஒரு பௌண்ட்ரியுடன் 5, தனஞ்ஜய டி சில்வா 2 ஓட்டங்களுக்கு விக்கெட்டை பறிகொடுத் தனர்.

இறுதியில் சரித் அசலங்க 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் உள்பட 62, அணித் தலைவர் தசூன் சானக ஒரு பௌண்ட்ரியுடன் 14 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிக்கு வழிநடத்தி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் சகீப் அல் ஹசன் 2, தஸ்கின் அகமது, ஷோரிஃபுல் இஸ்லாம், மெஹெதி ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.



# ஸ்வியாரெக் முன்னேற்றம்

நியூயோர்க், செப். 02

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் முதல் நிலை வீராங் கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில், இகா ஸ்வியாரெக் 6-3, 6-4 என அவுஸ்திரேலியாவின் டரியா சவில்லேவை சாய்த்தார்.

இதேபோன்று, ஆறாம் இடத்திலிருக்கும் அமெரிக் காவின் கோகோ கோஃப் 6-3, 6-2 என ரஷியாவின் மிரா ஆண்ட்ரீவாவை தோற்கடித்தார்.

10ஆம் இடத்திலிருக்கும் செக் குடியரசின் கரோலின் முசோவா 6-3, 6-3 என போலந்தின் மெக்தலினா ப்ரெச்சை வென்றார்.



# ஹமில்ரனின் ஒப்பந்தத்தை நீடித்தது மெர்சிடஸ் அணி!

லண்டன், செப். 02

களத்தில் காரை சாதுரியமாக மின்னல் வேகத்தில் செலுத்துவதில் வல்லவரான ஹமில்ரன் சமீபகாலமாக தடுமாற்றம் கண்டுள்ளார். கடந்த ஆண்டு ஒரு போட்டி யில்கூட வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில் அவருடனான ஒப்பந்தம் இந்த ஆண்டுடன் நிறைவடைய உள்ள நிலையில், மேலும் 2 ஆண்டுகளுக்கு மெர்சிடஸ் அணி ஒப்பந்தத்தை நீடித் துள்ளது. 2025ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அந்த அணிக்காக ஹமில்ரன் பந்தய வீரராக இருப்பார்.

இதற்காக அவருக்கு ஆண்டுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 96 கோடி ரூபாய் ஊதியமாக வழங் கப்பட உள்ளது. இது முந்தைய சீசனை விட ஏறக் குறைய 416 கோடி ரூபாய் அதிகமாகும்.

இதன் மூலம் போர்முலா வன் கார்பந்தயத்தில் அதிக சம்பளம் வாங்கும் நடப்பு சம்பியனான நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டப்பெனை சமன் செய்கிறார்.

# நியூசிலாந்து அணியை வீழ்த்தியது இங்கிலாந்து

செஸ்டர் லீ ஸ்ட்ரீட், செப். 02

நியூசிலாந்துக்கு எதிரான முதல் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற் றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடை யிலான 4 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக் கெட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் இரவு செஸ்டர் லீ ஸ்ட்ரீட்டில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியை 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 139 ஓட்டங் கள் என்ற நிலையில் மட்டுப்படுத்தினர் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள். அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 38 பந்துகளில், 4 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் சேர்த்தார். பின் ஆலன் 21, இஷ் சோதி 16 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் அறிமுக வீரரான 28 வயதான வேகப்பந்து வீச்சாளர் பிரைடன் கார்ஸ் 4 ஓவர்களை வீசி 23 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்கள் வீழ்த்தினார். அவருக்கு உறுதுணையாக வீசிய இடது கை வேகப் பந்து வீச்சாளரான லூக் வுட் 3 விக்கெட்கள் சாய்த்தார்.

140 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 14 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டேவிட் மலன் 42 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்களும், ஹாரி புரூக் 27 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 43 ஓட்டங்களும் விளாசினர்.



முன்னதாக ஜொன்னி பெயர்ஸ்ரோ 4, வில் ஜேக்ஸ் 22 ஓட்டங்களில் வெளியேறினர்.

ஆட்ட நாயகனாக பிரைடன் கார்ஸ் தேர்வானார்.

7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கி லாந்து தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# அமெரிக்க ஓப்பன் குவிட்டோவா தோல்வி!



நியூயோர்க், செப். 02

அமெரிக்க ஓப்பன் ரென்னி ஸில் முன்னணி வீராங்கனை யான செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா 2ஆவது சுற்றி லேயே தோல்வியடைந்து தொட ரிலிருந்து வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென் னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில், 11ஆம் இடத்திலிருந்த வரும் முன்னாள் விம்பிள்டன் சம்பியனுமான செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா 5-7, 6-7 (5/7) என்ற செற்களில், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியிடம் வெற்றியை இழந்தார்.

கடந்த 2020இல் ஓய்வு பெற்ற வோஸ்னியாக்கி 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீண் டும் களத்துக்குத் திரும்பிய நிலையில், முன்னணி வீராங் கனையை வீழ்த்தி அசத்தி யிருக்கிறார். (ஐ)

# சவூதியில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு உதவும் சீனா: சிக்கலில் இந்தியா, அமெரிக்கா

தீபக் மண்டல்



சவூதி அரேபியாவில் அணு மின் நிலையம் அமைக்க சீனா ஒரு ஒப்பந்தப் புள்ளியை அளித்துள்ளது. இதை சவூதி அரேபியா பரிசீலித்து வருகிறது.

அணு மின் நிலையம் அமைக்கும் தொழில்நுட்பத்தை சவூதி அரேபியாவுக்கு அளிக்க அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகளால் சலித்துப்போன அந்நாட்டு அரசு தற்போது சீனாவின் விருப்பத்தைப் பரிசீலிக்க முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கர்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் எல்லையில் அணுமின் நிலையத்தை அமைக்க சீனாவின் அரசு நிறுவனமான "சீனா நேஷனல் நியூக்ளியர் கார்ப்பரேஷன்" சவூதி அரேபியாவுக்கு முன்மொழிந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் இந்த முடிவு அமெரிக்காவின் நிபந்தனைகளைத் தளர்த்தும் என்று சவூதி அரேபிய அதிகாரிகள் நம்புகின்றனர். இதில் சவூதி அரேபியாவின் யுரேனியம் அகழ்வு மற்றும் செறிவூட்டல் திட்டத்திற்கு அமெரிக்கா விதித்துள்ள தடை போன்ற நிபந்தனைகளும் அடங்கும்.

இருப்பினும் அமெரிக்கா அத்தகைய தளர்வுக்கான எந்த அறிகுறியையும் இதுவரை காட்டவில்லை என்றாலும், அமெரிக்கா இந்தத் தளர்வுகளை அறிவித்தால், சவூதி அரேபியாவின் வளர்ந்து வரும் அணுசக்தித் துறை வேகம் பெறும் வாய்ப்புகள் உள்ளன.

யுரேனியம் மற்றும் புளூட்டோனியத்தை மறு செயலாக்கம் செய்வதை ஒப்புக்கொண்டால், சவூதி அரேபியாவுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை வழங்க முடியும் என்று அமெரிக்கா ஏற்கெனவே கூறியிருந்தது.

வால் ஸ்ட்ரீட் ஜர்னல் வெளியிட்டுள்ள செய்தியின்படி, அணு மின் நிலையத்தை அமைப்பதற்கு சீனாவின் உதவியை சவூதி அரேபியா பெறுவதன் மூலம், பைடன் நிர்வாகம் அணு ஆயுத பரவல் தடை விதிகளில் சில தளர்வுகளை அளிக்க முடியும் என்று சவூதி அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஏனெனில் அரபு நாடுகளில் சீனாவின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பதை அமெரிக்கா விரும்பவில்லை.

அமெரிக்க நிபந்தனைகளைக் கைவிடுவது தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், தனது நாட்டில் அணுமின் நிலையங்களை அமைக்க சீன நிறுவனங்களை சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அனுமதிக்கலாம் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் கூறியதாக இந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சவூதி அரேபியாவிடம் அமெரிக்காவை போல் நிபந்தனைகளை சீனா விதிப்பதாக எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை.



### சவூதி அரேபியா ஏன் அணுமின் நிலையத்தை அமைக்க விரும்புகிறது?

அண்மையில் ஈரான் மற்றும் சவூதி அரேபியா நாடுகளுக்கு இடையே ஒரு நட்புரீதியான ஒப்பந்தம் ஏற்பட சீனா உதவியது உண்மைதான். ஆனால் சவூதி அரேபியாவுக்கு ஈரானுடன் பழைய பகைமை ஒன்று உள்ளது. ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்தால், சவூதி அரேபியாவும் அதே முயற்சியில் இறங்கும் என அந்நாட்டு பட்டத்து இளவரசர் சல்மான் கூறி வருகிறார்.

சவூதி அரேபியா ஆக்கப்பூர்வமான அணுசக்தி திட்டத்தைச் செயல்படுத்தினால், அது பிற்காலத்தில் அணு ஆயுதங்களை உருவாக்க உதவும்.

சவூதி அரேபியாவின் ஆற்றல் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்குப் போதுமான யுரேனியம் இருப்பு இருப்பதாக இளவரசர் சல்மான் நம்புகிறார். ஆனால், புதிய அணுமின் நிலையம் அமைப்பது சவூதி அரேபியாவிற்கு புதிய வருவாய் ஆதாரங்களை உருவாக்கும். இது தவிர, சவூதி அரேபியாவின் புவிசார் அரசியல் சக்தியையும் கணிசமாக அதிகரிக்கும்.

இதுபோன்ற சூழ்நிலையில், சவூதி அரேபியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக இருப்பதால் யுரேனியம் பதப்படுத்தும் விஷயத்தில் சவூதி அரேபியா சீனாவின் உதவியை நாட வேண்டும். சவூதி அரேபியா யுரேனியத்தை பதப்படுத்தி அணு எரிசக்தி தயாரிக்கத் தயாராக இருப்பதாக பட்டத்து இளவரசர் ஏற்கெனவே கூறியிருந்தார்.

அப்போது, சவூதி அரேபியாவில் அணு உலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாக அந்நாட்டு எரிசக்தித் துறை அமைச்சர் தெரிவித்திருந்தார். சில தொழில்நுட்ப நிறுவனங்கள் அழைக்கப்பட்டு, அவற்றிடமிருந்து பரிந்துரைகள் விரைவில் பெறப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் செயல்படும் உலக விவகாரங்களுக்கான கவுன்சிலின் உறுப்பினரும், மத்திய கிழக்கு விவகாரங்கள் தொடர்பான நிபுணருமான ஃபஸ்லூர் ரஹ்மான் சித்திக் இதுகுறித்து பேசினார்.



அப்போது அவர், 'சவூதி அரேபியா தனது பொருளாதாரம் எண்ணெய் வளங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருப்பதைவிட அதை வேகமாக பல்வகைப்படுத்த முயல்கிறது. எனவே அந்நாட்டு அரசு மாற்று எரிசக்தி குறித்து தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இயற்கை எரிசக்தி, இயற்கையான தொழில்நுட்பங்களுடன் கூடிய கட்டடங்கள் எனப் பல்வேறு துறைகளில் மரபுசாரா ஆற்றலைப் பயன்படுத்த இப்போது சவூதி அரேபியா முயற்சித்து வருகிறது," என்று தெரிவித்தார்.

### அமெரிக்காவின் வியூகமும், அரபு நாடுகளின் அணு ஆயுதப் போட்டியும்

தற்போது சவூதி அரேபியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு கூட்டாளியாக அமெரிக்கா உள்ளது. ஆனால் அதே நாடு சீனாவுடனான தனது உறவை வலுப்படுத்துவதிலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், சவூதி அரேபியா இப்போது தனது சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்து வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சீனாவுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் அதிகரிப்பது இந்த உத்தியின் ஒரு பகுதியாகும்.

அண்மையில், சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையே நட்புறவை வளர்க்கும் நோக்கிலான ஓர் ஒப்பந்தம் ஏற்படுவதற்கான வழிவகைகளை உருவாக்கியதன் மூலம், அரபு நாடுகளில் சீனா தனது செல்வாக்கு அதிகரித்து வருவதற்கான ஆதாரத்தை அளித்துள்ளது.

சவூதி அரேபியாவின் ஆக்கப்பூர்வமான அணுசக்தி திட்டத்திற்கு இஸ்ரேலின் எரிசக்தி அமைச்சர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இஸ்ரேலில் அணுசக்தி பயன்படுத்தப்படாததால், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தப்படாத நாடாக அது உள்ளது.

அதே நேரம், அங்கு அணுசக்தி பயன்படுத்தப்படுவதில்லை என்ற போதிலும், அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளை அணு ஆயுதங்கள் வைத்திருப்பதில் இருந்து விலக்கி வைக்கும் உத்தியை அமெரிக்கா நீண்ட காலமாகப் பின்பற்றி வருகிறது. முழு மத்திய கிழக்கு நாடுகளிலும் இஸ்ரேல் மட்டுமே அணு ஆயுதங்களை வைத்துள்ள நாடு என்று கூறப்படுகிறது. இருப்பினும் இஸ்ரேல் இதுவரை அதை அதிகாரப்பூர்வமாக ஏற்கவில்லை.

ஈரானை அணுசக்தி நாடாக மாற அனுமதித்தால், மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் அணு ஆயுதங்களைத் தயாரிக்கத் தொடங்கும் என அமெரிக்கா சந்தேகிக்கிறது.

அணுசக்தி கொள்கை விஷயத்தில் இஸ்ரேல் மீதான அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து எப்போதும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. அந்நாட்டின் மீது அமெரிக்கா மென்மையான அணுகுமுறையைக் கொண்டிருப்பது அரபு நாடுகளில் அதன் இரட்டை நிலையாகப் பார்க்கப்படுகிறது.

ஆக்கப்பூர்வமான அணுசக்தி திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக எகிப்து நீண்ட காலமாகக் கூறி வருகிறது. தற்போது சவூதி அரேபியாவும் இந்த வழியைப் பின்பற்றி வருகிறது என்கிறார் சித்திக்.

"இதற்காக அந்நாட்டு அரசு அமெரிக்காவின் உதவியை நாடியது. ஆனால் அமெரிக்கா அதற்குப் பல்வேறு நிபந்தனைகளை விதித்தது. இங்குதான் சீனாவுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் நிலை உருவானது. சீனா தற்போது வளைகுடா நாடுகளில் மிகவும் ஆக்ரோஷமான ராஜதந்திரத்தைக் கடைப்பிடித்து வருகிறது. எங்கு வாய்ப்பு கிடைக்கிறதோ, அங்கெல்லாம் ஏதாவது ஒருவகையில் செயல்படும் முயற்சிகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகிறது," என்கிறார் சித்திக்.

மேலும், "அரபு நாடுகளில் இருந்து அமெரிக்காவை அகற்றி, தன்னுடைய செல்வாக்கை அதிகரிப்பதே சீனாவின் நோக்கம்," என்றார்.

இது சவூதி அரேபியாவுக்கு லாபகரமான ஒப்பந்தமாக அமையும். ஆக்கப்பூர்வமான அணுசக்தி திட்டத்தில் அமெரிக்கா உதவினால் அது நன்மை அளிக்கும் வகையில்தான் இருக்கும். ஆனால் அமெரிக்கா அது போல் உதவ மறுத்தால் அந்த இடத்தை நிரப்ப சீனா தயாராக உள்ளது.

உண்மையைச் சொல்லப் போனால், மத்திய கிழக்குப் பகுதியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு சீனா சவால் விடுத்து வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு ஏற்றாற்போல் சவூதி அரேபியா தனது முழு வெளியுறவுக் கொள்கையையும் மாற்றி வருகிறது.

சவூதி அரேபியா அமெரிக்காவை சார்ந்து இருப்பதில் இருந்து விலக முயல்வதாக சித்திக் கூறுகிறார். மேலும், "ஆக்கப்பூர்வமாக அணுசக்தியைப் பயன்படுத்த அமெரிக்கா உதவவில்லை என்றால், சீனாவின் உதவியுடன் அந்த வேலையை சவூதி அரசு செய்யும் என்பதற்கான சமிக்ஞை தெளிவாக வெளிப்பட்டுள்ளது," என்றும் தெரிவிக்கிறார்.

மேலும் பேசிய சித்திக், "அரபு நாடுகளில் சீனா நேரடியாக அமெரிக்காவுக்கு சவால் விடுத்து வருகிறது. அது மத்திய கிழக்கு நாடுகளுடன் அமெரிக்கா பேணி வரும் கூட்டணிக்கு எதிராக சவால் விடுவதுடன், அனைத்து முக்கிய நாடுகளாலும் எதிர்க்கப்படும் அணுசக்தியை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்வது பற்றி வெளிப்படையாக பேசுகிறது.




சீனா மற்றும் சவூதி அரேபியா இடையிலான எரிசக்தி துறை சார்ந்த வர்த்தகம் கணிசமாக அதிகரித்து வருகிறது. உலகின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதியாளராக சீனா உள்ளது. அதே நேரத்தில் சவூதி அரேபியா அதன் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக உள்ளது," என்றார்.

ஆனால் தற்போது இரு நாடுகளும் மாற்று எரிசக்தி துறையிலும் ஒத்துழைப்பை அதிகரித்து வருகின்றன. சீனாவின் அரசு நிறுவனமான 'சீனா எனர்ஜி கார்ப்பரேஷன்", சவூதி அரேபிய நிறுவனமான எஸ்.டபிள்யூ. பவர் உடன் இணைந்து 2.6 புறு சூரிய மின்சார உற்பத்தி ஆலையை உருவாக்கி வருகிறது. இது பயன்பாட்டுக்கு வரும்போது, வளைகுடா நாடுகளில் மிகப்பெரிய சூரிய மின்சக்தி திட்டமாக இருக்கும்.

சீன அதிபர் ஷி ஜின்பிங் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சவூதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டார். சீன-அரபு உறவுகளுடைய வளர்ச்சியின் வரலாற்றில் இது ஒரு மைல்கல் என்று சீன வெளியுறவு அமைச்சகம் கூறியது. ●

# ஜி 20 உச்சி மாநாடு: ரஷ்ய அதிபர் புடின் இந்தியா வர தயங்குவது ஏன்?

இந்தியா தலைமை தாங்கும் இந்த ஆண்டுக்கான ஜி 20 உச்சி மாநாடு, எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் தலைநகர் டில்லியில் நடைபெற உள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், சீன அதிபர் ஷி ஜின்பிங், சவூதி அரேபியா இளவரசர் முகமது பின் சல்மான் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

ஆனால் உலக அரசியலின் மையமாகவும், உலக அளவில் முக்கியமான தலைவர்களில் ஒருவராகவும் திகழும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஜி20 மாநாட்டில் பங்கேற்கவில்லை என்ற தகவல் வெளியாகி உள்ளது.

"டெல்லியில் நடைபெற உள்ள ஜி 20 உச்சி மாநாட்டில் பங்கேற்கும் திட்டம் புடினுக்கு இல்லை. உக்ரைனில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு இராணுவ நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே தற்போதைக்கு அதிபருக்கு முக்கியமான பணி" என்று புடினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோப் ரஷ்ய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

துருக்கி உடனான 'கருங்கடல் தானிய ஒப்பந்தம்' குறித்து ஆலோசனை நடத்த, அந்நாட்டின் அதிபர் எர்துவான் அழைப்பின் பேரில் புடின் விரைவில் துருக்கிக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆகஸ்ட் மாத இறுதியில் புடின் துருக்கிக்கு பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், ஆகஸ்ட் மாதம் முடிவடைய இன்னும் சில நாட்களே இருப்பதால், எதிர்பார்க்கப்பட்ட படி அவரது பயணம் நிகழாமல் போகவும் வாய்ப்புள்ளது என்று துருக்கி ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

**புடினுக்கு இது புதிதல்ல**


ஜி 20 மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருப்பது புடினுக்கு ஒன்றும் புதிய விஷயமல்ல. இந்தோனீசியாவின் பாலி நகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி 20 மாநாட்டிலும் அவர் பங்கேற்கவில்லை. இதேபோன்று, 2014 இல் ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டிலும் புதின் பங்கேற்கவில்லை. அப்போது அந்த மாநாட்டில் பங்கேற்க அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அத்துடன், தென்னாப்பிரிக்கா அண்மையில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டிலும் ரஷ்ய அதிபர் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக, இந்த மாநாட்டிலும், கடந்த ஆண்டு பாலி நகரில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டிலும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவ் பங்கேற்றார்.



**வெளிநாட்டு பயணங்களை தவிர்க்கும் புடின்**

கடந்த ஆண்டு பிப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. அப்போதில் இருந்து புடின் வெளிநாட்டு பயணங்களை வெகுவாக குறைத்துக் கொண்டிருக்கிறார்.

2002 ஜூனில் தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் பயணம், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்





மாநாட்டில் கலந்து கொள்ள கடந்த ஆண்டு உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் என்று கடந்த ஒன்றரை ஆண்டுகளில் புடின் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு தான் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இதில் உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற எஸ் சிஓ மாநாட்டின் போது, இந்திய பிரதமர் மோதி யையும் புடின் சந்தித்து பேசினார்.

அப்போது. "இது போர் புரிவதற்கான காலம் அல்ல" என்று புடினிடம் மோதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**புடின் இந்தியா வராததற்கு என்ன காரணம்?**

உக்ரேனை சேர்ந்த சில குழந்தைகள் சட்டவிரோதமாக ரஷ்யாவுக்கு அழைத்து வரப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், அதிபர் புடினை கைது செய்ய, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐசிசி) கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி பிடிவாரண்ட் பிறப்பித்திருந்தது.

இதேபோன்று, ரஷ்ய மனித உரிமை கள் ஆணையர் அலெக்ஸிவ்னா லவோவா பெலோவாவுக்கு எதிராகவும் இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ரஷ்யாவும், உக்ரேனும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கவில்லை.

ஆனால், தமது மண்ணில் நடக்கும் குற்றங்களை ஐசிசியின் கவனத்துக்கு கொண்டு வருவதாக கூறி. அதன் விதிமுறைகளை 2015 இல் உக்ரேன் ஏற்றுக் கொண்டது.

இந்த நிலையில், உக்ரேன் மீது ரஷ்ய போர் தொடுத்த அடுத்த மாதமே, அதாவது மார்ச் 2022ல், அங்கு இனப் படுகொலை நிகழ்ந்ததாகவும், மனித உரிமை மீறல்கள் நடைபெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக, ஐசிசி தரப்பு வழக்கறிஞரான கரீம் கான் உடனே விசாரணையை தொடங்கினார்.

**உலக நாடுகள் மீது ஐசிசியின் அழுத்தம்**

தென்னாப்பிரிக்காவும் ஐசிசியில் அங்கம் வகித்து வருகிறது. இந்நிலையில் அண்மையில் அங்கு நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் புடின் கலந்து கொண்டிருந்தால், சர்வதேச அமைப்பான ஐசிசி, புடினுக்கு எதிராக பிறப்பித்துள்ள பிடிவாரண்ட் உத்தரவை செயல்படுத்த ஒத்துழைக்குமாறு தென்னாப்பிரிக்கா அவரை வற்புறுத்தி இருக்கலாம்.

அப்படியொரு தர்ம சங்கடமான சூழல் ஏற்பட்டால் என்ன செய்வது எனக் கருதி, மாநாட்டில் பங்கேற்பதை புடின் தவிர்த்திருக்கலாம் என்று கருதப் படுகிறது.

சொல்லப்போனால், ஐசிசியில் உறுப்பினர்களாக உள்ள 123 நாடுகளும், இந்த அமைப்பு பிறப்பிக்கும் பிடிவாரன்ட்களை அமல்படுத்துவதில் ஒத்துழைக்க வேண்டும்.

ஆனால் இந்தியாவை பொருத்தவரை, ஐசிசியில் உறுப்பினராக இல்லாததன் காரணமாக, அதன் பிடிவாரண்ட் போன்ற உத்தரவுகளை செயல்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்ற அவசியம் இந்தியாவுக்கு இல்லை.

உதாரணமாக, இந்தியா- ஆப்பிரிக்கா மன்ற கூட்டத்தில் பங்கேற்க, சூடான் முன்னாள் அதிபர் ஒமர் ஹசன் அல் பஷீர், 2015 இல் இந்தியாவுக்கு வருகை புரிந்திருந்தார்.

அப்போது அவரை கைது செய்ய இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்று ஐசிசி வலியுறுத்தி இருந்தது. ஆனால் இந்த கோரிக்கையை இந்தியா கண்டுகொள்ளவே இல்லை.

தென்னாப்பிரிக்காவில் அண்மையில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் புடின் பங்கேற்றிருந்தால், அங்கு அவரை கைது செய்வதற்கான அழுத்தம் எழலாம் என்று, இந்த மாநாட்டுக்கு முன் அச்சம் எழுந்தது.




ஆனால், ஐசிசியில் இந்தியா அங்கம் வகிக்காததால், டெல்லியில் நடைபெறவுள்ள ஜி 20 உச்சி மாநாட்டில் புடின் பங்கேற்றால், அவரை கைது செய்வது தொடர்பாக, ஐசிசி இந்தியாவுக்கு எவ்வித அழுத்தமும் கொடுக்க முடியாது.

ஆனாலும், இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க புடின் இந்தியா வராமல் தவிர்ப்பது ஏன் என்ற கேள்வி சர்வதேச அரசியலில் எழுந்துள்ளது.

**ரஷ்யா என்ன சொல்கிறது?**

இந்த கேள்விக்கு, "உக்ரேனில் ரஷ்யா மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளில் புடின் தற்போது கவனம் செலுத்த வேண்டி உள்ளது" என்று அவரது செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோப் விளக்கம் அளித்துள்ளார்.

உக்ரேன் போரின் விளைவாக ரஷ்யாவும், புடினும் உலக அளவில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேற்கத்திய நாடுகளுடனான ரஷ்யாவின் உறவு மிகவும் மோசமாக உள்ளது. அந்நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன என்றும் டிமிரிர் பெஸ்கோப் மேலும் கூறி உள்ளார்.

"உலக அளவில் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜி 20 மாநாட்டில் தான் பங்கேற்றால், அங்கு தன்னுடைய பேச்சுக்கு மரியாதை இருக்காது அத்துடன் தானும் விமர்சனத்துக்கு ஆளாகலாம் என்ற அச்சமும் புடினுக்கு இருக்கலாம்.

மேலும், மாநாட்டில் பங்கேற்கும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேலை நாடுகளின் தலைவர்களை நேருக்கு நேர் சந்திக்க புடின் விரும்பாமல் இருக்கலாம். இவையே டெல்லியில் நடைபெற உள்ள ஜி 20 மாநாட்டிற்கு புதின் வருகை தரலாம் இருப்பதற்கு முக்கிய காரணம்" என்று டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ஆசிய மற்றும் ரஷ்ய விவகாரங்கள் துறையின் விரிவுரையாளர் சஞ்சய் பாண்டே கூறுகிறார்.

மற்றபடி, தமக்கு எதிராக ஐசிசி பிறப்பித்துள்ள பிடிவாரண்ட் காரணமாக புடின் இந்தியா வருவதை தவிர்ப்பதாக தான் கருதவில்லை. ஏனெனில் அவர் இந்தியாவில் கைது செய்யப்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் பாண்டே கூறியுள்ளார்.

டெல்லியில் நடைபெற உள்ள ஜி20 மாநாட்டில் உக்ரேன் போர் தொடர்பாக விவாதிக்கப்படலாம் என்ற எண்ணத்தின் காரணமாகவும் புடின் இந்தியா வருவதை தவிர்க்கலாம் என்றும் தெரிகிறது.

# மட்டு. மேற்கு கல்வி வலயத்தில் ஆண், பெண் இரு பாலாருக்குமான உதைபந்தாட்டப்போட்டி





மட்டக்களப்பு, செப். 02

ஐரோப்பிய ஒன்றியம் காற்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 16 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி ஸ்றீட் சைல்ட் அமைப்பின் ஏற்பாட்டில் முனைக்காடு இராமகிருஸ்ணா மைதானத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரன் தலைமையில் கடந்த புதன் கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், வலயக் கல்விப் பணிப்பாளர் ஜெயச்சந்திரன், ஸ்றீட் சைல்ட் அமைப்பின் இலங்கைக்கான திட்ட முகாமையாளர் ஏ. கஜேந்திரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் மற்றும் உதவி கல்விப்பணிப்பாளர்கள், ஸ்றீட் சைல்ட் அமைப்பின் பிரதிநிதிகள், கல்வி திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வலயத்திலிருந்து 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஸ்றீட் சைல்ட் அமைப்பினரால் ஆறு மாதகாலப்பயிற்சி வழங்கப்பட்டு அவர்களுக்கான இறுதிப் போட்டி நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் நாவற்காடு நாமகள் வித்தியாலயமும் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் எந்த கோல்களும் போடாத நிலையில் தண்ட உதை மூலம் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தை எதிர்த்து ஆடிய பன்சேனை பாரிவித்தியாலயம் 3.0 என்ற அடிப்படையில் கோல்களை போட்டு பாரிவித்தியாலயம் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றி கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# அரச ஊழியர்களுக்கான சம்பளச் செலவு குறைவு

கொழும்பு, செப். 02

மாகாண சபைகள் உட்பட அரச நிறுவனங்களின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்கத்தின் செலவு சுமார் 4 வீதமாக குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 303.3 பில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளளது.

எனினும் கடந்த 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடும் போது, 12.8 பில்லியன் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவாக 316.1 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, கட்டாய ஓய்வில் சென்றமை, ஓய்வு பெறும் வயதை 60 வயதாக திருத்தியமை, அரச துறைக்கான ஆட்சேர்ப்பை நிறுத்தியமை ஆகியன காரணமாக இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த அரசாங்கம் செலவிட்ட நிதி இவ்வாறு குறைந்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் ஓய்வூதியத்தைச் செலுத்த அரசாங்கம் 105.9 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

இந்த தொகையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 6.3 வீத அதிகரிப்பு என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# பஸ் விபத்தில் மூவர் காயம்!



திருகோணமலை - ஹொரவப் பொத்தானை பிரதான வீதி கன்னியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

மன்னாரிலிருந்து திருமலை நோக்கிச் சென்ற அரச பேருந்தும்,சுற்றுலா வந்தவர்களை ஏற்றி வந்த பேருந்தும் கல் குவா ரிக்கு அருகே விபத்துக்குள்ளானதாகவும் இதனால் மூவர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்விபத்து நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் கம்பஹா பிரதேசத்தில் இருந்து வந்த சுற்றுலா பயணிகள் மூவர் காயமடைந்தனர்.

கன்னியாவுக்கு சுற்றுலா சென்ற தனியார் பஸ் கல்குவாரிக்கு அருகில் திருப்ப முற்பட்ட போது வேகமாக வந்த அரச பஸ் மோதியதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை திருகோணமலை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

